கடவுளின் நற்செய்தி

[redacted]

GOD'S GOOD NEWS

[redacted]

கனம் **A. P. GIBBS** அவர்கள்
ஆங்கிலத்தில் இயற்றியது

Translated
by permission of the Publishers,
THE WALTERICK PRINTING COMPANY,
Fort Dodge, Iowa, U. S. A.
1956

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆத்தும ஈடேற்றம்

ஈடேற்றம் மனிதருக்கு அத்தியாவசியம்.

நண்பனே! யாரோ ஒருவர் உன்னைப் பார்த்து "நீ இரட்சிக்கப்பட்டதுண்டா?" என வினவினால் என்ன பதிலளிப்பாய்? ஒரு சமயம் இரட்சிப்பு, இரட்சிப்படைதல் ஆகிய இப்பதங்களின் தாற்பரியம் இன்னதென நீ சரிவர அறியாதிருந்து மேற்படி கேள்விக்குப் பதிலுரைக்கக்கூடாத நிலைமையிலிருக்கலாம். அதுபோல ஏதோ ஒரு கட்டடத்தில் "இயேசு இரட்சிக்கிறார்" என்று வரைந்திருக்கக் கண்டால் அல்லது கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றிய ஒற்றைத் தாள்களில் "இரட்சிப்பு" என்னும் விஷயத்தைக் குறித்துப் படித்தபோது அவ்விஷயம் ஒருவேளை உனக்குச் சற்று கருகலாய்த் தோன்றியிருக்கும். இந்தச் சிறிய புத்தகத்தின்மூலம் அவ்விஷயத்தைத் தெளிவாக்கப் பிரயத்தனப்போம்.

இரட்சிப்பு என்னும் பதத்தின் கருத்து என்னவெனில், நேரிடும் ஆபத்துக்கு ஒருவனைத் தப்புவித்துக் காப்பாற்றுதல் என்பதேயாம். உதாரணமாக, நீந்தத் தெரியாத ஒரு ஆள் ஆற்றில் விழுந்து சாவுக்கினமான ஆபத்துக்குள்ளானான் என்று வைத்துக்கொள்வோம். அவன் தன்னை இரட்சித்துக்கொள்ளும்படி எவ்வளவு பிரயத்தனஞ் செய்து பார்த்தாலும் இயலாது. அப்படியிருக்க, நீச்சம் பழகின ஒருவன் அவனுக்குண்டான அபாயத்தைக் கண்டு ஆற்றில் குதித்துச் சாகிற அவனைப் பத்திரமாய்க் கரையேற்றினால் அவ்வாறு இரட்சிக்கப்பட்டவன் இந்த அனுபவத்தைக்குறித்து என்ன சொல்லுவான்? தான் தண்ணீரில் மாளாதபடி இரட்சிக்கப்பட்டதாகவும் தன்னைத் தப்புவித்துக் காப்பாற்றினவன் தன் இரட்சகன் என்பதாகவும் கூறுவான் அல்லோ? ஆகவே, இரட்சணியத்தில் ஆபத்து விடுதலை ஆகிய இரு விஷயங்களும் அடங்கியுள.

மெய்க் கடவுள் நமக்கு அருளிய தூதாகிய சத்திய வேதத்தில் இரட்சணியம் என்கிற விஷயத்தைக் குறித்து அதிகம் விளம்பியிருக்கின்றது. இரட்சகர், இரட்சிப்பு, இரட்சிக்கப்பட்டவர்கள் ஆகிய இப்பதங்கள் சத்திய வேத நூலில் பன்முறை பிரயோகித்துள. "இரட்சகர்" என்பது தீமையினின்று தப்புவித்திரட்சிக்கிற ஒருவரைக்குறிக்கும். "இரட்சிக்கப்பட்டவர்கள்" என்பது தங்களுக்குண்டான அபாயத்தினின்று விடுவிக்கப்பெற்றவர்களைக் குறிக்கும்.

ரட்சிப்பு" என்பது ஆபத்தினின்று யாரையாவது விடுவித்த முழு சயலேயும் குறிக்கும். இவ்விஷயம் சத்திய வேதத்தில் மிகவும் அதிம் காணப்படுவதற்குக் காரணம் யாதெனில், மனிதர்யாவரும் உயிர் மோசத்திற்குரிய ஆபத்திலிருப்பதே. இந்த அபாயம் இன்னதெனவும் நாம் அதினின்று விடுவிக்கப்படுவதின் அவசியம் இன்னதெனவும் சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

நாம் அனைவரும் பாவத் தன்மையுள்ளோர்.

இரட்சணியம் நமக்கு அத்தியாவசியம் என்னும் சத்தியத்தை இது வற்புறுத்திக் காட்டுகிறது. எப்படியெனில், மனிதரான நாம் யாவரும் பாவத் தன்மையுள்ளோராகவே பிறந்தோம். இந்த ஜென்மப் பாவம் நம்மால் உண்டானதல்ல, அந்தச் சுபாவத்தை நமது பெற்றோரிடமும் அவர்கள்மூலம் ஆதி மானிடராகிய ஆதாம் ஏவாள் என்பவர்களிடமும் பெற்றோம். அது இவ்வுலகில் பிறக்கும் யாவரையும் தொத்துகிறது. அதுவுமன்றி, நமது சுபாவம் முழு ஜீவியத்துக்கும் ஊற்றும் காரணமுமாயிருப்பதால் அதற்கேற்றபடி சிந்தனைசெய்து, அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி நடக்கிறோம். உதாரணமாக நாம் ஒருவனை நற்குணசீலன் எனச் சொல்லும் பட்சத்தில் அவனது ஜீவியம் முழுவதும் யோக்கியமுள்ளது என்பதே நமது கருத்தாகும். ஒருவனது குணமும் அவன் நடத்தையும் ஒன்றுபோல் இருக்கும் என்பது நிச்சயம்.

சிறிய புலிக்குட்டி ஒன்று இருக்கிறது என வைத்துக்கொள்வோம். அது பூனைக்குட்டி போல அழகுள்ளதும் ஒரு கெடுதியும் செய்யாததுமாயிருக்கும். சிறிதாயிருக்குங்காலத்தில் நேர்த்தியாய் விளையாடும் ஒரு சிறிய பிராணியாயிருந்தும் கொஞ்சங்காலம் செல்லவே அதிலுள்ள கொடிய சுபாவம் வெளிப்படும்; அது காட்டிலுள்ள மற்ற மிருகங்களுக்கெல்லாம் மகா பயங்கரமான துஷ்டமிருகமாகும். அதாவது, புலிக்குட்டியின் உள்ளான தன்மை வெளிப்படுவதற்குக் கொஞ்சம் நாள் சென்றால் அதுவே போதும்; அதைக் கொடிதும் பயங்கரமுமான மிருகமாக்குவதற்கு வேறொன்றும் அவசியமில்லை என்று பார்க்கிறோம்.

சகல குற்றவாளிகளும் முற்காலத்தில் ஒரு தீமையும் செய்யாத குழந்தைகளாயிருந்தார்கள். பின்னை, பல அழகான சிறுவர்களைப் பயங்கரமான குற்றவாளிகளாக்கினது எது? இந்த மாபெரும் மாறுதலின் படிகளாவன :—

அக் குழந்தைகளின் தீய சுபாவமானது தக்கவாறு அடக்கப் படாமல் வளர்ந்துகொண்டு வந்தது. சீக்கிரத்தில் அத்தன்மை தீய சிந்தனைகளைப் பிறப்பித்தது; அச்சிறுவர்கள் அவற்றைத் தங்கள் மனதில் பேணி வைத்துத் தீய சொற்களை மொழிய ஆரம்பித்தனர்; அதற்கு அடுத்தபடியாக அவர்கள் தீய செயல்களை நடப்பித்தனர்; வாலிபரானதும் அவர்கள் அறிந்தும் தெரிந்தும் கடவுளுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்யும் **மனப்போங்குடையவர்களானார்கள்**. அதற்கப்பால் அவர்கள் மற்ற மனிதருக்குக் கூச்சமின்றித் தீமை செய்வது இயல்பே.

ஜென்மப் பாவத்தின் உற்பத்தி.

சத்திய வேதத்தின் ஆரம்பத்தில் (ஆதியாகமம் 3ம் அதிகாரம்) இந்த ஜென்மப் பாவத்தன்மை நமக்கு உண்டான வகை இன்னதெனத் தெளிவுறப் போதித்திருக்கிறது. ஆதி மனிதனாகிய ஆதாம் என்பவன் மனுஜாதியாருக்குத் தலைவனாயிருந்தான். அவன் வேண்டுமென்று கடவுளின் கட்டளையை மீறி நடந்த செய்கையானது அவன்மட்டில் நில்லாமல் அவன் சந்ததியாராகிய **மனுஜாதியாரனைவரையும்** தொத்தும் பாவமாயிற்று. இவ்விதமாய் ஆதாமின் தவறுதலினால் அவனுடைய பிள்ளைகள் ஜென்மப் பாவமுள்ளோராகப் பிறந்தார்கள். அவ்வாறு பிறந்து தங்கள் பிள்ளைகளிடத்தும் அவர்கள்மூலம் பின்வரும் ஒவ்வொரு தலைமுறையிடத்தும் அந்தப் பாவத்தன்மையைக் கொடுத்திருக்கின்றனர். ஆகவே எல்லா மனிதரும் ஆதாமின் பாவத்தினால் சீர்கெட்டுப்போயிருக்கிறார்கள். நாம் ஒவ்வொருவரும் இந்த ஜென்மப் பாவ சுபாவத்தில் பங்கு பெற்றிருக்கிறோம். மீண்டும் இதைச் சற்று விளக்கிக் கூறப் பிரயத்தனிப்போம். நாம் பாவச் செய்கைகளை நடப்பிக்கிறதினால் பாவிகளாகிறதில்லை. நமக்கு ஏற்கனவே ஜென்மப் பாவம் உண்டாயிருப்பதினாலேதான் பாவச் செய்கைகளை நடப்பிக்கிறோம். இதுவிஷயமாய்ச் சத்திய வேதத்தில் கூறியுள்ள வாக்கியமாவது: "**ஒரே மனுஷனாலே** (ஆதாம்) பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், **எல்லா மனுஷரும்** பாவஞ்செய்தபடியால் மரணம் **எல்லாருக்கும்** வந்ததுபோலவும்......ஆயிற்று"; ரோமர் 5 : 12. எடுத்துக்காட்டாக, உலகப்பிரகாரம் நம் பெற்றோர் எந்த ராஜ்யத்தாரோ நாம் அவர்களிடம் பிறந்தபடியால் அதே ராஜ்யத்தின் பிரஜைகளாகிறோம். அதுபோலவே ஆத்தும விஷயத்திலும் நம்மைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் பாவிகளானதால் அவர்களது பிள்ளைகளாகிய நாமும் பாவச் சுபாவத்திற்குரியவர்களே.

பின்னும் சில திருஷ்டாந்தங்களைக் கூறுவோம். ஒரு நாய் தான் நாயாகும் பொருட்டு குரைக்கிறதில்லையே. அது நாயாயிருப்பதினால் தானே குரைக்கிறது. குதிரையாகும்படி ஒரு குதிரை கனைக்கிறதில்லையே. அது குதிரையாயிருக்கிறதினால்தானே கனைக்கிறது. அதுபோலவே ஒரு மனிதன் பாவக் கிரியைகளைச் செய்வதினால் பாவியாகிறதில்லையே. அவன் பாவியாயிருப்பதினால்தானே பாவஞ் செய்கிறான். நாய் தன் சுபாவத்தின்படியே குரைக்கிறது. குதிரை தன் சுபாவத்தின்படியே கனைக்கிறது. மனிதர் தங்கள் சுபாவத்தின்படியே பாவஞ் செய்கின்றனர். பாருங்கள், பொய் பேசவோ, பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் நடக்கவோ, கோபப்படவோ, தங்களுடையதல்லாததை எடுத்துக்கொள்ளவோ, கெட்ட சிந்தனைகளைச் சிந்திக்கவோ, தீதான வார்த்தைகளைச் சொல்லவோ, சிறு பிள்ளைகளுக்கு ஒருவரும் கற்பிக்கவேண்டுவதில்லையே. அவர்களின் உள்ளான தன்மை எதுவோ அதுவே பின்னால் அவர்களின் பாவக் கிரியைகளில் விளங்கும். மாமரமாவதற்காக ஒரு மாமரம் மாங்கனி கொடுக்கிறதில்லையே. அது மாமரமாயிருப்பதினால்தானே மாங்கனி தருகிறது. மரத்தின் வேர் எந்தவர்க்கமோ அதுவே பின்னால் விளையும் கனியில் விளங்கும் அல்லோ? விளையும் பயிர் முளையில் தெரியும் என்னும் பழமொழிபோல மாமரமானது நூற்றுக்கணக்கான காய் காய்க்கும் பெரிய விருட்சமாகக் கூடியதாயினும் அது சிறு கன்றாயிருக்கும்போதே மாமரத்தின் தன்மையுடையதே என யாவரும் அறிவார்கள். நாம் பிறக்கும்போதே நம் ஒவ்வொருவரின் இருதயத்திலும் **ஜென்மப் பாவமாகிய ஊற்று** உண்டு; காலஞ் செல்லச் செல்ல அவ்வூற்றின் **பெருக்காகிய கன்மப் பாவம்** (பாவச் செய்கைகள்) காணப்படுகின்றது. சத்தியவேதக் கோரிக்கை இதுவே; சங். 51 : 5; எரே. 13 : 23; 17 : 9, 10; ஏசா. 53 : 6; மாற்கு 7 : 21—23.

பாவத் தன்மையுள்ளோர் கடவுளுக்குப் பிரீதியாய் ஜீவிக்க முடியாது.

இது இரட்சணியத்தின் அவசியத்தை வற்புறுத்திக் காட்டும் இரண்டாம் நியாயம். மாம்சம் என்று சத்திய வேதத்தில் குறிப்பிட்டிருக்கும் மேற்சொல்லிய பாவத்தன்மை கடவுளின் திருமொழிகளுக்கும் அவரது சித்தத்துக்கும் அவருக்குப் பிரியமான நடத்தைக்கும் முற்றும் விரோதமானதே. இயற்கையாக எல்லாரும் கடவுளைப் பகைக்கிறவர்களாகவும் அவருக்கு விரோதமாய்க் கலகம் பண்ணுகிறவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் அவருக்குப்

பிரியமானவற்றை வெறுத்து அவர் வெறுக்கிறவற்றை விரு... கிறார்கள் என்பதாக வேதம் போதிக்கிறது. "மாம்ச சிந்தை தே...னுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாண...துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்"; ரோமர் 8 : 7, 8.

சிநேகா! நீ இன்னும் இரட்சிக்கப்படாவிடில் கடவுளுக்குப் பிரியமானதொன்றையும் நீ இதுவரைக்கும் செய்ததில்லை என்று இவ்வாக்கியத்தின்மூலம் அறிந்துகொள்க. பாவத் தன்மையுள்ளோரின் ஜீவியம் கடவுள்விஷயத்தில் பிரயோஜனமற்ற வாழ்க்கையாகும். ஆகையால்தான் இயேசுநாதர் பக்திமானும் சன்மார்க்கனுமான நிக்கொதேமுவினிடம்: "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்......நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும்" என்று கூறினார்; யோவான் 3 : 3, 7. அந்த மனிதன் பக்திமானும் சன்மார்க்கனுமாயினும் ஜென்மப் பாவமுள்ளவனே. கடவுளுக்குப் பிரியமாய் ஜீவிக்கக்கூடிய ஒரு புதிய சுபாவம் (அல்லது ஜீவன்) அவனுக்குள் உண்டாவது அவசியம்.

நமது சரீரப் பிறப்பானது நமக்கு இயல்பான மனுஷிகத் தன்மையை மட்டும் அளித்தது. நாம் மேலே காட்டியபடி அந்தத் தன்மையானது இவ்வுலகத்தின் சாதாரண ஜீவனுக்கும் ஜீவியத்துக்குமுரியதாகையால் அதைப் பெற்ற நாம் கடவுளுக்குப் பிரியமாய் நடக்கக்கூடாத நிலைமையில் இருக்கிறோம். ஆயினும் இந்தத் தீயகுணமுள்ளோரான நம்மில் ஒருவன் கிறிஸ்துநாதரைத் தன் இரட்சகராக ஏற்றுக்கொண்ட மாத்திரத்தில் ஆண்டவர் அவன் நெஞ்சத்தில் வேறொரு தன்மையையும் ஜீவனையும் உண்டாக்குகின்றார். மெய்யாய்க் கிறிஸ்துவை நம்பிச் சார்ந்து ஏற்றுக்கொண்டோரின் நெஞ்சில் புதிதாய் உண்டாகும் இந்த ஜீவன் **ஆவிக்குரிய ஜீவன்** எனப்படும். அதைப் பெறுபவர்கள் "திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களும்" தேவனுடைய ராஜ்யத்தின் பிரஜைகளுமாகின்றனர்; 2 பேதுரு 1 : 4; ரோமர் 14 : 17. இச்சுபாவத்தைப் பெற்ற விசுவாசி எவனும் கடவுள் சித்தப்படியே சிந்திக்கவும் பேசவும் நடக்கவும் கூடும். நாம் முதல் முதல் சரீரத்திற்குரியதும் ஜென்மச் சுபாவமுமான ஜீவனடைந்து இவ்வுலகில் பிரவேசிப்பது **பிறப்பு** என்று சொல்வதுபோல நாம் ஆவிக்குரிய திவ்விய சுபாவத்தை அடைந்து தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது **மறுபிறப்பு** என்று சத்திய வேதத்தில் பெயர் பெற்றுள்ளது; 1 பேதுரு 1 : 23; 2 பேதுரு 1 : 3, 4.

இந்தப் புதிய ஜென்மத்தினுல் நம் பழையதும் தீயதுமான பாவம் சீரடைகிறது என நினைக்கலாகாது. அந்த மாம்சத்திற்குரிய ஜென்மச் சுபாவத்தை ஒருக்காலும் மாற்றவாவது சீர்திருத்தவாவது இயலாது. இப்படியிருப்பதினுல்தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நிக்கொதேமு என்பவனிடம்: "மாம்சத்தினுல் பிறப்பதுமாம்சமாயிருக்கும்" என்று போதித்தார். ஒருவன் முள், குருக்கு முதலியவற்றை அதிகச் சிரத்தையோடு பயிர்செய்து வருவதினுல் அவைகளில் திராட்சப்பழமும் அத்திப்பழமும் பறிக்கலாம் என யோசிக்கிருன் என்று வைத்துக்கொள்வோம். அவன் மேற்கூறிய முட்செடிகளை நன்ருய்ப் பண்படுத்திய நிலத்தில் நட்டு அவைகளை மிகவும் கவனமாய் வளர்த்து வந்தாலும் அவை திராட்சப்பழமாவது அத்திப் பழமாவது தருமா? தராதே! அவை பெரிய முள்ளையும், குருக்கையுமே தவிர வேருெரு கனியையும் தராது என்பது மகா தெளிவு அல்லோ? இதற்கிசையக் கிறிஸ்துநாதர்: "முட்செடிகளில் திராட்சப் பழங்களையும் முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிருர்களா?" என வினவினுரே! மத். 7 : 16.

ஆகவே, மறுஜென்மத்தின்மூலம் கடவுள் பழைய சுபாவத்திற்கு முற்றும் மாருன ஒரு புதிய, தெய்வீகச் சுபாவத்தை விசுவாசிக்கு அருளுகின்ருர். விசுவாசி அப்புதிய தன்மையைப் பெற்றதினுல் தேவனுடைய திருவசனத்தில் பிரியப்பட்டு அதை ஆராய்ச்சி செய்யவும் தேவ சித்தப்படி நடக்கவும் அவருடைய வழிகளில் செல்லவும் விரும்புகிருன். ஆகையால் உண்மையான விசுவாசி மாம்ச சுபாவத்திற்குத் தப்பி ஆவியானவர் அருளும் சுபாவத்திற்கு ஆளாகிருன்; தேவ ஆவியானவர் அவனுக்குள் வாசஞ்செய்கிருர்; ரோமர் 8 : 9; எபே. 1 : 13; 4 : 30; கலா. 4 : 16—23.

நண்பனே! நீ வாஸ்தவமாக மறுபிறப்படைந்ததுண்டா? அல்லது மறுஜென்மமடையாமல், உன் சுய முயற்சிகள், தீர்மானங்கள், பக்திக்குரிய அலுவல்கள், புண்ணியக் கிருத்தியங்கள் ஆகிய இவைகளைக்கொண்டு கடவுளைச் சாந்திபண்ணி அவரிடம் இரட்சிப்பைச் சம்பாதிக்கப் பார்க்கிருயா? இவ்விஷயங்களை ஆழ்ந்து சிந்திக்கவும். ஆண்டவராகிய இயேசு: "நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும்" என்று உறுதியாய்ச் சாதித்ததை மறக்கலாகாது. நீ பக்திமானுயினும் அவபக்தனுயினும், சன்மார்க்கனுயினும் துன்மார்க்கனுயினும், படித்தவனுயினும் படியாதவனுயினும், வாலிபனுயினும் வயோதிபனுயினும், சொத்துள்ளவனுயினும் ஏழையாயினும், எப்படிப்பட்டவனுயினும் நீ மறுபடியும் பிறக்கவேண்டியது அவசியம்; மற்றப்படி நீ கடவுளுக்குப் பிரீதியாய் ஜீவிப்பது அசாத்தியம்.

நாம் அனைவரும் கன்மப் பாவமுள்ளோர்.

நமது தன்மை மட்டுமல்லாமல் நம் செய்கைகளும் பாவமுள்ளவை. அதாவது, நாம் பன்முறை வேண்டுமென்று தீய நினைவுகள் சொற்கள் செய்கைகள் ஆகிய பாவங்களை நடப்பிக்கிறோம். இது இரட்சணியத்தின் அவசியத்தை வற்புறுத்திக் காட்டும் மூன்றும் நியாயம். இதைப்படிப்போர் யாவரும் உள்ளதை உள்ளபடி ஒத்துக் கொள்ள மனமாயிருந்தால் இது உண்மை எனச் சம்மதிப்பார்கள் என்று நம்புகிறோம்.

நீ கடந்த சில நாள், வாரம், மாதம் பின்னிட்டுப்பார்த்து உன் நடக்கையை நன்கு கவனிக்குங்கால் நீ அநேக விதத்திலும் சமயங்களிலும் பாவஞ் செய்ததாக உணர்ந்து கொள்வாய். நீ உன் உள்ளத்தில் பேணிவைத்த ஒவ்வொரு தகாத எண்ணமும், பேசிய ஒவ்வொரு பொய்யும், உன்னிடம் காணப்பட்ட ஒவ்வொரு கீழ்ப்படியாமையும் ஒவ்வொரு தீய போங்கும் செயலும் கடவுளுக்கு விரோதமான பாவமாகும் என்பதை உணர்ந்து கொள்ளவும். ஏனெனில் சகல தவறுதல்களும் அவருக்கு விரோதமான பாவமே.

மேற்படி விஷயங்கள் உனக்கு வேதனையான ஞாபகமூட்டுகிறபடியால் அவற்றைக் கவனிக்க ஒருவேளை நீ மனமற்றிருக்கலாம். ஆயினும், சத்தியத்தைக் கேளாது முகங்கோணுவது ஞானமன்றே. உண்மையானவை நமக்குச் சிலவேளை வெறுப்பாயினும் அவற்றைக் கவனித்துக்கொள்வதே ஞானம். உதாரணமாக அநேகர் காலதாமதஞ்செய்யாமல் வைத்தியரிடம் சென்று தங்கள் உடம்பு முழுவதையும் சோதனை செய்ய ஒப்புக்கொடுத்ததினால் பயங்கரமான மரணத்துக்குத் தப்பினர். எப்படியெனில், வைத்தியர் சோதனைசெய்து கொடிய வியாதியைக் கண்டுபிடித்தும் அதை நீக்கும்படியான பக்குவங்களைக் காட்டவும் கூடியதாயிற்று. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே பரம வைத்தியர். ஆகையால் அவருடைய பரிசோதனைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து, அவர் கூறுகிறபடியே தான் ஒரு மாபாவி என ஒத்துக்கொண்டு அவர்மட்டும் அருளக்கூடிய ஆரோக்கியம் பெறும்படியாகத் தன்னை அவர் கரத்தில் சமர்ப்பிக்கிறவன் மெய்ஞ்ஞானமுடையவன்.

வைத்தியசாலையில் எக்ஸ்ரே (X-Ray) படம் மனிதரின் சரீரத்திற்குள் இருப்பதை எப்படி எடுத்துக் காட்டுகிறதோ அப்படியே சத்திய வேதம் நம் இருதயத்தின் ரோகங்களையெல்லாம் எடுத்துக் காட்டுகிறது. கடவுள் நமது நிலைமையை எப்படி விஸ்தரித்துக் கூறியிருக்கிறார் என வேத நூலில் படித்தறியலாம். ஏனெனில் அவர் நம்மை முற்றுமாய் அறிவார்; அவர் அறியாமல் நாம் ஒன்றையும் மறைத்துவைக்க முடியாது. கீழ்க்காணும் வாக்கியங்களைக் கவனமாய்ப் படித்து அவைகள் பொதுவாக **மனுஜாதியரைக்** குறித்தும் திட்டமாக **உன்னைக்** குறித்தும் கூறுவதை அறிந்துகொள்க:—"நீதிமான் ஒருவனாகிலும் இல்லை;......எல்லாரும் வழி தப்பி, **ஏகமாய்க்** கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, **ஒருவனாகிலும்** இல்லை......**வித்தியாசமே இல்லை. எல்லாரும்** பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்கள்" ஆனார்கள்; ரோமர் *3 : 10—18, 23.*

ஜென்மச் சுபாவமுள்ளோர் அனைவரின் படமும் இவ்வாக்கியங்களில் வரைந்திருக்கக் காண்கிறோம். ஆகவே, இது உன் படமே என்றறிக. இப்படமானது உண்மையாகவே உன் நிலைமையைக் காட்டுகிறதா? உனதுள்ளம் ஆம் எனச்சாட்சி கூறி நீ பரிசுத்த கடவுளின் பார்வையில் படுபாவி என உணர்ந்துகொள்ளும். உனக்குத் தெரிந்த வேறநேகரைப்போல நீ பெரிய அக்கிரமஞ்செய்யாதிருப்பினும் நீ பழிக்குத் தப்பமுடியாது, ஏனெனில் "வித்தியாசமே இல்லை, எல்லாரும் பாவஞ்செய்தார்கள்" எனக் கடவுள் தீர்ப்பிட்டிருக்கிறார். அதாவது, எல்லாரும் ஒரேவிதமாய் அல்லது ஒரே அளவாய்ப் பாவஞ்செய்யாவிடினும் சிறிதளவாவது எல்லாரும் பாவஞ் செய்ததுண்டு.

திருஷ்டாந்தத்தால் இதை விளக்குவோம். சதுரமான துப்பாக்கிக் குறி ஒன்றிருக்கிறது என வைத்துக்கொள்வோம். அதின் நடுவில் குறிப்பு ஒன்று வரைந்திருக்கிறது. மூன்று வாலிபர் அதற்கு 100 அடி தூரத்தில் கையில் துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டு நிற்கிறார்கள். ஒவ்வொருவனும் நடுக்குறிப்புக்கு நேராய்ச் சுடுகிறான். முதல் வாலிபனது குண்டு குறி முழுவதும் தப்பிற்று; இரண்டாம் வாலிபனின் குண்டு குறியின் ஓரத்தில் பட்டது. மூன்றும் வாலிபனின் குண்டு நடுக்குறிக்குச் சுமார் இரண்டு அங்குலத் தூரத்தில் மட்டும் தப்பிற்று. இப்படியிருக்க மூன்று வாலிபரில் எவன் நடுக்குறியை அடித்தான்? ஒருவனும் இல்லையே. மூவரும் தாங்கள்

பரிசுத்த குறியை அடையாமல் குறி தப்பினார்களே. மற்ற இருவரை காட்டிலும் ஒருவன் குறியின் அருகில் சுட்டது உண்மையே ஆகிலும் வாஸ்தவத்தில் வித்தியாசமே இல்லை; ஏனெனில் மூவரும் குறி தப்பினார்கள். மேற்சொல்லிய குறி எதற்குச் சமானமாகும்? பூரண சற்குணக் கடவுள் விதித்திருக்கும் குறைவற்ற பரிசுத்த நிலைமைக்கே சமானம். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பலத்தோடும், உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" என்று அவர் கூறிய கட்டளையை நன்கு கவனிக்க; லூக். 10 : 27. மனிதரில் எவனாவது இக்கட்டளையைத் தவறின்றிக் கைக்கொண்டேன் என்று தைரியமாய்ச் சொல்லக்கூடுமா? கூடாதே. கடவுளின் கற்பனைகளைக் கொண்டு நம்மைச் சோதித்துப் பார்க்கப் பார்க்க நாம் இவ்விஷயத்தில் எவ்வளவோ குறைவுள்ளவர்கள் எனக் கண்டுகொள்வோம். ஆகவே, தேவ கட்டளைகளை நிறைவேற்றத் தவறுகிறவர்கள் தங்கள் தவறான நடக்கையினால் பாவிகளாய்க் காணப்படுகிறார்கள். எப்படியெனில், தேவனுக்குப் பிரீதியில்லாத எந்த நினைவும், வார்த்தையும் செய்கையும் மனப்போக்கும் பாவமேயாகும்.

நண்பனே! கடவுள் தமது வேதத்தில் கூறுகிறபடி நீ ஆக்கினைக்குப் பாத்திரமான ஒரு பாவி என ஒத்துக்கொள்ளுகிறாயா? நீ எண்ணிறந்த சமயங்களில் உன் மனோ வாக்குக் காயங்களினால் தகாதவைகளைச் செய்ததுண்டே. "பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்" என்று அறிக்கையிட்ட ஊதாரியைப் போலவும், "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று ஜெபித்த ஆயக்காரனைப் போலவும் ஒருவன் தன் பாவங்களை அறிக்கையிடுவதே ஞானம்; லூக். 15 : 21; 18 : 13.

நாம் நமது பாவக் குற்றங்களை மறைக்கவாவது அவற்றைக் குறித்துச் சாக்கு சொல்லவாவது அற்பமாய்ப் பாவிக்கவாவது அவைகளைப் பிறர்மீது சாட்டவாவது முயலாமல் உண்மையாகவே அவைகளை உணர்ந்து ஒத்துக்கொள்ளவேண்டும். இயேசுநாதர்: "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" என்றும் "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" என்றும் சாதித்தாரல்லோ? மத். 9 : 13; லூக். 19 : 10. (இதுவிஷயமாய் எபே. 2 : 1—3; தீத்து 3 : 3; பிர. 7 : 20; சங். 14 : 1—3ஐயும் காண்க).

கடவுள் பாவியைத் தண்டிப்பது அவசியம்.

இச்சத்தியம் இரட்சணியத்தின் அவசியத்தை வற்புறுத்திக் காட்டும் நான்காம் நியாயம். எப்படியெனில், கடவுள் பரிசுத்தமும் நீதியுமுள்ளவராய்ச் சகலவிதப் பாவத்தையும் அரோசிக்கிறபடியால் அவர் அதை அகத்தியமாய்த் தண்டித்தல் வேண்டும். எடுத்துக்காட்டாகப் பின்வரும் சத்தியவேத வாக்கியங்களைக் கவனிக்க: "நான் வெறுக்கிற இந்த அருவருப்பான காரியத்தைச் செய்யாதிருங்கள்" என்கிறார். "தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணனே, அநியாயத்தை நோக்கிக் கொண்டிருக்கமாட்டீரே" என்று ஒரு பக்தன் ஜெபித்தாரல்லோ? மீண்டும், "பாவத்தின் சம்பளம் மரணம்" என்றும் "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" என்றும் எழுதியிருக்கிறது; எரே. 44 : 4; ஆபகூக் 1 : 13; ரோமர் 6 : 23; எசேக்கியேல் 18 : 20.

நம்தேசத்தின் சட்டப்படி நீதி விளங்கக் குற்றவாளி எப்படித் தண்டிக்கப்படவேண்டுமோ அப்படியே நீதியுள்ள கடவுள் பாவியைத் தண்டிப்பது அவசியமே.

இப்படியிருக்க, பாவிகள் மன்னிக்கப்படாவிடில் கடவுளின் வாசஸ்தலமாகிய பரலோகம் செல்லமுடியாது. இதற்கிசைய, ஜனங்கள் தம்மை விசுவாசியாவிடில் தங்கள் பாவங்களிலே சாவதாக இயேசுநாதர் கூறினதோடு "நான் போகிற இடத்திற்கு வர உங்களால் கூடாது" என்றும் சாதித்தார்; யோவான் 8 : 21, 24. மோட்சத்தின் வாசலில்: "தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும்......பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம்......பிரவேசிப்பார்கள்" என்று வரையப்பட்டிருக்கிறது; வெளி. 21 : 27.

எந்தப் பாவ அழுக்கும் பரலோகத்தில் காணப்படாததால் ஆங்கு செல்ல விரும்புவோர் யாவரும் தங்கள் பாவம் நீங்கச் சுத்திகரிக்கப்படல் அத்தியாவசியமே. பாவிகளாகவே சாகிறவர்களின் பயங்கரமான நிலைமையைக் குறித்து இயேசுநாயகர் கூறிய வசனங்களைப் படிக்க. அப்படிப்பட்டவர்கள் மோட்ச பேரின்பத்தை அனுபவியாமல் அழுகையும் பற்கடிப்புமுள்ள புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள் என்றார்; மாற்கு 9 : 43—48; மத். 25 : 30, 41, 46; லூக். 16 : 19—31.

இத்தகைய துக்ககரமுள்ள விஷயங்களைச் சொல்வது நமக்கு வருத்தமாயினும் அன்புள்ள இரட்சகர் தாமே தாம் சம்பாதித்த இரட்சணியத்தை வேண்டா வெறுப்போடு அசட்டை செய்கிறவர்களை இவ்வண்ணம் எச்சரிக்கிறார் என்பதைக் கவனித்தல் நலம். எனினும் "ஒருவரும் கெட்டுப்போகாமல், எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" என்கிற அருமையான வாக்கியமும் எழுதியிருக்கிறதே; 2 பேதுரு 3 : 9.

மேற்கூறியபடி கடவுள் பாவிகளாகிய நம்மை நம் பயங்கரமான நிலைமையைத் தொட்டு எச்சரித்திருக்க நாம் ஒவ்வொருவரும் நித்திய அழிவுக்குத் தப்பித்துக்கொள்ள என்ன செய்யவேண்டும் எனக் கரிசனையோடு வினவவேண்டுமல்லோ?

கடவுள் அருளிச்செய்த ஆத்தும ஈடேற்றம்.

ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று கடவுள் விரும்புகிறதாக மேலே கவனித்தோம். நமது பாவத்தின் ஆக்கினையினின்று நம்மை ஈடேற்ற அவர் ஆற்றிய வழிவகை இன்னதென ஆராய்ச்சி செய்வோம்.

முதலாவது, **தேவன் தாம் எல்லாரிடத்திலும் அன்பு கூருகிறதாக வெளிப்படுத்தியிருக்கிறார்.**

சத்தியவேதம் கூறுகிறபடி கடவுள் **ஒளியாயிருப்பதால்** அவர் பாவமாகிய விஷயத்தில் நிர்விசாரியாய் இருக்கமுடியாது; அதுபோல அவர் **அன்பாயிருப்பதினால் பாவியின்** விஷயத்தில் நிர்விசாரியாய் இருக்கவுமாட்டார்; 1 யோவான் 1 : 5; 4 : 8.

"தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை......தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என இயேசுநாதர் தெளிவுற உரைத்தார்; யோவான் 3 : 16. ஆம், கடவுள் பாவத்தை வெறுத்து அதற்குத்தண்டனை விதிப்பதவசியமாயினும் அவர் பாவியை நேசித்து அவனை இரட்சிக்க ஏக்கங்கொண்டிருக்கிறார். இதை வாசிக்கும் நண்பா! கடவுள் உன்னையும் நேசிக்கிறார் என நிச்சயமாய் அறிந்துகொள்.

இயேசு நேசிக்கிறார்,—இயேசு நேசிக்கிறார்,
இயேசு என்னையும் நேசிக்க யான் செய்த
தென்ன மாதவமோ?

இக்கவிக்கு இசையவே நம்மிடம் காணப்படும் ஏதோ புண்ணியத்தினிமித்தம் கடவுள் நம்மை நேசியாமல் . அவர் தமது அன்பார்ந்த தன்மைக்கேற்பவே நம்மிடம் அன்புகூருகிறார்.

கடவுள் குற்றஞ்செய்தவர்களைத் தண்டிக்கத் தீவிரிக்கும் குரூர நெஞ்சுள்ளவர் என்று பலர் நினைக்கின்றனர். அப்படிக்கில்லாமல் நம்முடைய இரட்சகராகிய தேவன் தயையும் மனுஷர்மேல் அன்பும் உள்ளவராயிருக்கிறார் என வேதம் மேன்மைப்படுத்திக் கூறுகிறது; தீத்து 3 : 4. மீண்டும், "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த மிகுந்த அன்பு" என்றும் "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" என்றும் படிக்கிறோம்; எபே. 2 : 4; 1 தீமோ. 2 : 4.

இரண்டாவதாக, **கடவுள் பாவிகளிடம் வைத்த அன்பை எப்படிக் காட்டினார்** எனில் அவர் தமது திருக்குமாரனை இரட்சகராக உலகிற்கு அனுப்பியே தமது பேரன்பை ரூபகாரப்படுத்தினார். அதுவுமன்றி, தம்முடைய அன்பின் பெருக்கத்தைத் தமது மாபெரும் ஈவினாலே காட்டினார். தமக்கு நிகரான திருக்குமாரனை இவ்வுலகத்துக்குக் கடவுள் அனுப்பினது பாவிகளை நேசிக்கும் பொருட்டல்ல, தாம் ஏற்கனவே அவர்களில் அன்பு வைத்தபடியினால்தான் அவரை அனுப்பினார். இயேசு கிறிஸ்து தம் மகிமை பொருந்திய மோட்ச பதவியை விட்டுப் பாவம், அந்தகாரம், மரணம் ஆகிய இவைகளால் நிறைந்துள்ள உலகில் பாவிகளை இரட்சிக்க வந்தார். கருணைகூர்ந்து தம்மைத் தாழ்த்தி மனுஷீகத்தைப் பூண்டு பெத்லகேம் என்னும் சிற்றூரில் ஒரு கன்னிகையின் வயிற்றில் பிறந்தார். நம்மைப்போல் அவர் ஜென்மப் பாவமுள்ளவராய் அவதரியாமல் மனோவாக்கு காயத்தில் பாவம் இல்லாமலும், அறியாமலும் செய்யாமலும் இருந்தார்; அவர் "பரிசுத்தரும் குற்றமற்றவரும் மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவரும்" ஆயிருந்தார்; எபி. 7 : 26. (எபி. 4 : 15; 2 கொரி. 5 : 21; 1 பேதுரு 2 : 22ஐயும் படிக்க). இப்படிப்பட்ட சுத்தப் பரிசுத்தர் மட்டுமே பாவிகளை ஈடேற்றக்கூடும்.

திரு அவதாரம் அதிசயமும் மாட்சிமையுமானதே. சர்வ சிருஷ்டி கர்த்தாவாகிய அவர் பாலகனாகப் பெத்லகேமூரில் பிறந்தார்; யோவான் 1: 1—4, 10. தேவாதி தேவன் மானிடனானாரே. நமது பாவப் பழியைச் சுமந்து நம்மை இரட்சிக்கும்படி நம்மேல் விழவேண்டிய

ஆக்கினையை அனுபவித்து நமக்காக மரணமடைந்தார். அவர் திருவாய் மலர்ந்து: "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" என்றும் "உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" என்றும் மொழிந்தார்; லூக். 19 : 10; யோவான் 3 : 17.

மூன்றாவதாக, **ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டு நம்பி நடக்கும் யாவரும் ஈடேற்றமடைய வழி உண்டாக்கினார்.** எப்படியெனில் ஓர் ஈனச் சிலுவையில் மரணமடைந்தே பாவிகளுக்காகப் பூரண இரட்சிப்பை உண்டாக்கினார். இயேசு கிறிஸ்துவின் மரணமே கிறிஸ்து மார்க்கத்தின் அடிப்படையான சத்தியம். அவர் தமது மாசற்ற ஜீவியம், தாம் மொழிந்த அதிசயகரமான சொற்கள், தாம் ஆற்றிய வல்ல செயல்கள் ஆகிய இவைகளால் தம்மை நித்திய கடவுளின் குமாரன் என ரூபித்துக் காட்டியும் இவையனைத்தும் பாவிகளான நம்மை இரட்சிக்காதே. நமதினிமித்தம் தம்மைப் பிராயச்சித்த பலியாக ஒப்புக்கொடுத்தே நம்மை ஈடேற்றினார். இரட்சணியத்திற்கு வேறு வழிவகையில்லையே.

இதற்கு முன்னரே, பாவத்தின் சம்பளம் மரணம் என்றும், பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகவேண்டியது என்றும் கடவுள் உரைத்ததாகக் கவனித்துள்ளோம். ஆம், கடவுள் நீதிபரரானபடியால் அவர் பாவ விஷயத்தில் கண்சாடையாய் இருக்கமுடியாது. அவர் அகத்தியமாய்ப் பாவியைத் தண்டித்தல் வேண்டும். இப்படியிருக்க, பாவிகளாகிய நாம் கடவுள் விதித்த நீதியுள்ள தீர்ப்புக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்? ஒரே வழியுண்டு, யாதெனில், இயேசு கிறிஸ்து சுமார் ஆயிரத்து தொளாயிரம் வருடங்களுக்கு முன் கல்வாரி என்னும் இடத்தில் சிலுவையில் மாண்டு நமக்காக உண்டுபண்ணிய இரட்சணிய வழியேயாம்.

இவ்விஷயத்தைச் சற்று விவரித்துச் சொல்வோம். மாசற்ற தேவகுமாரன் தம்மைத்தாமே வலிய ஈன மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து. "தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்;" 1 பேதுரு 2 : 24. "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்;" ஏசா. 53 : 6. இவ்வாக்கியங்களின் தாற்பரியம் என்ன? இயேசுநாதர் நமது பாவங்களினால் விளையும் தண்டனை முழுவதையும் அநுப

ராட்சித்துத் தீரவேண்டியிருந்தது. அவ்வாறு அவர் சிலுவையில் தொங்கலானபோது கடவுளின் நீதியுள்ள கோபாக்கினியின் சகல அலைகளும் திரைகளும் அவர்மேல் புரண்டு அவரை மடங்கடித்தன. அவர் அதை முற்றுமாய் அனுபவித்ததினால் மேற் சொல்லிய நீதியுள்ள தேவ தீர்ப்பை நிறைவேற்றித் தீர்த்தார்.

இவ்வாருக, இரட்சகர் தம்மையே பலியாகத் தியாகஞ்செய்து தம்மை விசுவாசித்து நடக்கும் ஒவ்வொரு பாவியின் இரட்சணியத்திற்காகவும் நிறைவேற்ற வேண்டிய சகல கிரியைகளையும் நிறைவேற்றி முடித்தார். நண்பனே! இச்சத்தியத்தை நீ நன்கு உணர்ந்து கொண்டாயா?

மரித்தாரே கிறிஸ்தேசு
உனக்காகப் பாவி

லோகத்தின் பாவத்தை தேகத்தில் சுமந்தே
லோலாயமாய்ச் சிலுவையிலே பாராய்—மரி

கிறிஸ்து செலுத்திய அந்தப் பாவ நிவாரணபலியை நீதிபரரான கடவுள் அங்கீகரித்தார் என்பதற்கு அத்தாட்சியாகக் கிறிஸ்து மரணமடைந்த வேளையில் "முடிந்தது" என ஆர்ப்பரித்தார். இயேசு இப்படி முடிந்தது என மொழிந்ததின் தாற்பரியமென்ன? தாம் இவ்வுலகில் என்னென்ன கிரியைகளைச் செய்யும்படி வந்தாரோ அவைகளெல்லாம் நிறைவேறி முடிந்தது என்பதே அதன் அர்த்தமாம். கிறிஸ்து என்ன கிரியைகளைச் செய்ய உலகத்தில் வந்தார்? தம்மைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாசித்து நடக்கும் யாவருக்காகவும் பரிபூரணமும் இலவசமும் நித்தியமுமான மீட்பை உண்டாக்குவதே அக்கிரியையாம். இயேசு கிறிஸ்து பூர்த்தி செய்த இந்த இரட்சணியக் கிரியையைத் தேவ பிதா ஏற்றுக்கொண்டு சாந்தியடைந்ததற்கு ரூபகாரமாக அவரை உயிரோடு எழுப்பினர்.

ஆகவே நமது இரட்சிப்புக்கு அவசியமானது எல்லாம் குறைவின்றிச் செய்து முடிந்தது என்பதற்கும் கிறிஸ்து நமதினிமித்தம் ஒரேதரம் நித்திய மீட்பை உண்டாக்கினர் என்பதற்கும் அவரது உயிர்த்தெழுதலே பிதாவாகிய கடவுள் கூறும் சாட்சியம் எனச் சொல்லலாம். இப்படியிருக்கிறபடியால் நமது புண்ணியக் கிருத்தியங்களாவது, முயற்சிகளாவது, பக்தியுள்ள தீர்மானங்

களாவது. ஜெபங்களாவது, நாம் அடைந்த மனஸ்தாபமாவது ஆத்தும இரட்சிப்பைச் சம்பாதிக்க இயலாது. கிறிஸ்துநாதர் கல்வாரியில் நிறைவேற்றி முடித்த பரிபூரண இரட்சணியச் செயல் மட்டுமே நம்மை ஈடேற்றக்கூடும். இது நற்செய்தியல்லோ?

இதை உதாரணங்களால் விளக்குவோம். நீ ஒருவரிடம் ஒரு பெரிய கடன் வாங்கியிருக்கிறதாக வைத்துக்கொள்வோம். கடன் தீர்க்கவேண்டிய நாளில் உன்னிடம் செலுத்துவதற்கு ஒரு காசும் இல்லை. கடன் கொடுத்தவர் உன்னை நெருக்கிப் பயமுறுத்துகிற தினலே உனக்கு மகா சஞ்சலமுண்டாகிறது. இச்சமயத்தில் உன் நண்பர்களில் ஐசுவரியவான் ஒருவர் வந்து உன்னை ஆறுதல்படுத்தி: இனி அந்தக்கடனைப்பற்றிக் கவலைப்படாதீர். நான் போய் அதைத் தீர்த்து ரசீதைக் கொண்டுவந்து கொடுக்கிறேன் என வாக்களிக்கிறார். சீக்கிரத்துக்குள் அவர் திரும்பி வந்து ரசீதைத் தருகிறார். அதில் கடன் கொடுத்தவர் முழு தொகையையும் பெற்றுக்கொண்டதாகக் கையெழுத்திட்டிருக்கிறதைப் பார்க்கிறாய். உனக்கு இப் பேருபகாரஞ் செய்த நண்பருக்கு அளவுகடந்த நன்றி காட்டுவாயல்லவோ? சரி, இதற்குப் பிறகு நீ இன்னும் அந்தப் பணம் விஷயத்தில் கடனாளியா? அல்லவே! பின்னை, நீயே கடனைத் தீர்த்தாயா? இல்லையே, செலுத்த உனக்கு நிர்வாகமில்லையே. அப்படியிருக்க நீ எப்படி விடுதலையானாய்? என யாராவது விசாரித்தால் என்ன பதிலுரைப்பாய்? "என் சிநேகிதன் என் கஷ்டத்தைக் கவனித்து எனக்காகக் கடனைத் தீர்த்துவிட்டாரே" என்பாய். அதுபோலவே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமது பாவக்கடன்களை அறிந்து நமக்காகப் பரிதபித்து நம்மை விடுவிக்கும்படி கடவுளின் நீதியுள்ள தீர்ப்பை அனுபவித்துத் தீர்த்தார். சிநேகா! நீ இந்த நற்செய்தியை நம்பி இரட்சகர் உன்னிமித்தம் உண்டுபண்ணிய மீட்சிக்காக நன்றிசெலுத்தினயா? இல்லையேல், இப்பொழுதே இச்சத்தியத்தை ஏற்றுக்கொண்டு ஆண்டவருக்கு நன்றி செலுத்துவாயாக.

இன்னோர் உதாரணம் கூறுவோம். நீ மரணதண்டனைக்கேற்ற பெருங்குற்றஞ் செய்தாய் என வைத்துக்கொள். நீ கைதியாகி நியாயஸ்தலத்தில் விசாரிக்கப்பட்டபோது உனக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. நீ தூக்கு மரத்துக்கு நடத்தப்படும் சமயத்தில் உனக்கு மரண தண்டனை விதித்த நீதிபதி அதனருகில் நிற்கும் அதிசயக் காட்சியைக் கண்டாய். தூக்கு போடுகிறவன்

யிற்றை உன் கழுத்தில் மாட்டும்படி கிட்டிவரவே நீதிபதி முன்வந்து: இந்த மனிதனை அவன் செய்த குற்றத்தின் தண்டனையினின்று விடுவிக்க வந்திருக்கிறேன். அவனை விடுவிக்க நான் அவன்மேல் சுமரும் பழியைச் சிரமேற்கொண்டு சட்டத்தை நீதியாக நிறைவேற்றுவேன். அவனுக்குப்பதிலாக என்னைத் தூக்கிப் போடு, அந்தக் கயிற்றை என் கழுத்தில் போடு எனச் சொன்னார் என்றும் வைத்துக்கொள். இப்படிப்பட்ட காரியம் மெய்யாய் நடந்தால் குற்றவாளியான நீ அந்தக் கருணையுள்ள நீதிபதி உனக்குச் செய்ததை எப்படி வர்ணிப்பாய்? "அந்த நியாயாதிபதி அபாத்திரனான என்னை நேசித்து என் குற்றத்தைச் சுமந்து என்னிமித்தம் மரித்து என் அக்கிரமத்தின் பலனினின்று என்னை விடுவித்துக் காப்பாற்றினார்" என்பாய் அல்லவா? இதைப்போன்றே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்குப் பதிலாளாக மாண்டார். நாம் நமது பாவப்பழியோடே செத்துக் கடவுளின் சமுகத்தினின்று நித்தியமாய்த் தள்ளுண்டுபோகப் பாத்திரர். சர்வ சிருஷ்டிகர்த்தாவும் சர்வலோக நீதிபதியுமாகிய கிறிஸ்துவோ நமக்குப் பதிலாளாக வந்து நமது பாவப்பழியை ஏற்றுக்கொண்டு சிலுவையில் தமது திருரத்தத்தைச் சிந்தித் தமது ஆருயிரைத் தந்தே அந்தப் பழியை நீக்கினார். கடவுள் மன்னிப்பிந்து நம்மை ஏற்றுக்கொள்ளும் பொருட்டுக் கிறிஸ்துநாதர் அவரால் கைவிடப்பட்டார். நமது தண்டனையையெல்லாம் அனுபவித்து நம்மை விடுதலை பண்ணினார்.

அன்பனே! அருள்நாதர் உன்னிமித்தம் ஆற்றிய திவ்விய இரட்சணியத்திற்காக நீ அவருக்கு நன்றி செலுத்தினதுண்டா? "தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" என்றும் "என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரன்" என்றும் பவுல் அப்போஸ்தலன் சாட்சி கூறினார்; 2 கொரி. 9:15; கலா. 2:20. இந்தச் சத்தியத்துக்கு ஆதாரமாக நிற்கிற கீழ்க்காணும் வேத வாக்கியங்களையும் படிக்க:—

ஏசா. 53:5; மாற்கு 10:45; மத். 1:21; யோவான் 10:11,15-18; 1 கொரி. 15:3,4; 2 கொரி. 5:14,15; 1 பேதுரு 3:18; வெளி. 5:9.

Bapuji Press, 187, Mount Road, Madras-2—3,000/'56

கடவுள் உண்டுபண்ணின இரட்சண்யவழி

அல்லது

ஒரு பாவி எப்படி இரட்சிக்கப்படலாம்?

"இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்" என்று ஒருவேளை நீ உனக்குள்ளே கேட்டுக்கொண்டிருக்கிறாய். இதே கேள்வியை அநேக நூற்றாண்டுகளுக்குமுன்னமே ஒரு மனுஷன் கேட்டான் (அப். 16: 30, 31). பாவப்பழிக்கு நீங்கலாக எப்படியாவது இரட்சிக்கப்படவேண்டும் என நீ ஆசையாயிருந்தால், தேவன் சம்பாதித்ததும் உனக்குத் தேவையுமான இரட்சிப்பை நீ கண்டடையாதபடி எதுவானாலும் தடை செய்ய இடங்கொடுக்கமாட்டாய் என்று நம்புகிறேன். நீ இரட்சிப்படையவேண்டும் என்னும் உண்மையான ஆவல் உனக்கிருந்தால், தேவன் உன்னை இரட்சிக்கப் பன்மடங்கு ஆசையுள்ளவராய் இருக்கிறார் என்பது நிச்சயம். அதுவுமன்றி, இரட்சணியத்தின் மேலுள்ள அந்த ஆவலை உனக்குள் உண்டு பண்ணினவர் தேவனே.

பாவிகள் தங்கள் பாவத்தினிமித்தம் துக்கப்பட்டு இரட்சகரைத் தேடும்படியாக அவர்களைக் கண்டித்துணர்த்தவே பரிசுத்த ஆவியானவர் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டார் (யோவான் 16:7–11). "நான் கடவுளை விட்டுத் தூரமாய்ப் போனவன், குற்றவாளி, சக்தியற்றவன், நம்பிக்கையற்றவன, நரகத்திற்கே பாத்திரமான பாவி" என நீ உணர்ந்துகொண்டாயேயாகில் அவ்வுணர்ச்சியை உனக்குள் உண்டு பண்ணினவர் பரிசுத்த ஆவியானவரே என அறிந்துகொள். "நான் நீதிமான்களையல்ல (அதாவது தங்களை நீதியுள்ளோர் என்று எண்ணுகிறவர்களையல்ல) பாவிகளையே (அதாவது தங்களைப் பாவிகள் என உணருகிறவர்களையே) மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" என்று இயேசுநாதர் மொழிந்தார் (மத். 9: 13). ஆம், இவ்வாக்கியம் சத்தியமே. எப்படியெனில், தங்கள் நிலைமையை உணரும் குற்றவாளிகளே மன்னிப்பையும், சீர்கெட்டவர்களே ஓர் இரட்சகனையும், பிணியாளிகளே ஒரு வைத்தியனையும் தேடுவார்கள்.

நான் ஒரு மா பாவி, கடவுளின் நித்திய கோபாக்கினைக்குப் பாத்திரன், இவ்வாக்கினையினின்று என்னை இரட்சிக்கக் கிறிஸ்து சிலுவையில் மரித்து எனக்காக இரட்சிப்பைச் சம்பாதித்தார் என்று உணருகிறேன். எனினும் இந்த இரட்சகரையும் அவர் அருளும் இரட்சணியத்தையும் எனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள எனக்கு வகை தெரியாது எனத் தவிக்கிறாயா? அப்படியானால் பின்வருபவற்றைக் கவனமாய் வாசித்துப்பார்.

முதலாவது உன் குறைவைக் கடவுள் முன்னிலையில் ஒத்துக்கொள்.

நீ கடவுளுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தாயே, அவருக்கே உன் குற்றத்தையும் உன் பாவ நிலைமையையும் அறிக்கை செய். அவரது திருவேதத்தில் கூறியிருக்கிறபிரகாரமே நீ பாவஞ் செய்தவன் எனப் பின்வருமாறு ஒத்துக்கொள்.

1. நான் ஒரு குற்றவாளி என நீ கடவுளிடம் அறிக்கையிடு.

கடவுளின் கட்டளைக்கு விரோதமாகவும் என் மனச்சாட்சிக்கு விரோதமாகவும் நான் திரும்பத் திரும்பத் துணிகரமாய்ப் பாவஞ் செய்தேன் என்று அவருக்குச் சொல்லு. உன் பாவங்களைக் குறைக்க வாவது அற்பமெனக் காட்டவாவது பிரயத்தனிக்காதே. "நீ எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தாயா செய்யவில்லையா" எனக் கடவுள் உன்னைக் கேட்கும் சமயத்தில் "ஆம், கடவுளே, நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்த குற்றவாளிதான். உமக்குமுன்பாகப் பிரதிவாதஞ்செய்ய எனக்கு வகையில்லை" என்று பாசாங்கின்றி அவரிடம் கூறு (லூக். 15: 18; 18: 13).

2. நான் சீர்கெட்ட ஒரு பாவி என நீ கடவுளிடம் அறிக்கையிடு.

நான் கடவுளின் நேர்மையான வழியை விட்டு விலகிப் பாவமான வழிகளில் அலைந்து திரிந்தேன் என்றும், கடவுள் என்னை இரட்சிக்காவிடில் நான் அழிந்தே போவேன் என்றும் ஒத்துக்கொள். உன் பாவத்தினின்று விடுவிக்கப்படாவிடில் நீ கெட்டே போனவன் என நிச்சயமாய் அறிந்துகொள். 2 கொரிந்தியர் 4: 3ல் "எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால். கெட்டுப் போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும்" என்று கூறியிருக்கிறது. ஆகவே சுவிசேஷத்தின் ஒளி உன் இருதயத்தில் பிரகாசிக்காவிடில் நீ கெட்டுப்போனவர்களில் ஒருவனே என அறிந்துகொள்ளவும்.

3. நான் சக்தியற்ற ஒரு பாவி என நீ கடவுளிடம் அறிக்கையிடு.

அதாவது, கடவுளின் இரட்சணியமடையப் பாத்திரனாகும்படி யாதொரு நற்கிரியையும் செய்ய நான் திராணியற்றவன் என்று ஒத்துக்கொள். நீ எடுத்துக்கொண்ட பிரயாசங்களாகிய நல்ல தீர்

மானங்கள், நற்கிரியைகள், ஜெபங்கள், மார்க்க அனுஷ்டானங்கள், கண்ணீர் யாவும் வீணாய்ப் போயிற்று என்றும் ஒப்புக்கொள். பின்வரும் கவியைக் கற்று, இதை உன் முழுமனதோடும் கடவுளிடம் பாடு :—

கண்ணீர் நித்தம் சொரிந்தும்,
கஷ்டதவம் புரிந்தும்
பாவம் நீங்க மாட்டாதே,
நீரே மீட்பர், இயேசுவே;
ஏதுமின்றி ஏழையேன்
உம்மில் தஞ்சம் புகுந்தேன்.

இதற்கிசையவே, பரிசுத்த வேதாகமம் பாவியைக் குறித்து: "பெலனற்றவன்" (ரோமர் 5: 6) என்றும், "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவன்" (எபே. 2: 1) என்றும், "தேவனுடைய ஜீவனுக்கு அந்நியர்" என்றும், "தேவனற்றவர்கள்" என்றும், "நம்பிக்கையில்லாதவர்கள்" என்றும், "கிறிஸ்துவைச் சேராதவர்கள்" என்றும் (எபே. 4: 18; 2: 12) விளம்பியிருக்கின்றது. நீ இந்நிலைமையிலிருக்கிறபடியால் நீ உன்னையே இரட்சிக்கச் சற்றேனும் திராணியற்றவன் அல்லவா? ஆயினும், உன் சக்தியற்ற நிலைமையே கடவுள் தமது பராக்கிரமத்தினால் உன்னை ஈடேற்ற ஏதுகரமாயிருக்கிறது என்பதை அறிந்து உணருவாயாக.

4. நான் நரகத்திற்குப் பாத்திரவான் என நீ கடவுளிடம் அறிக்கையிடு.

கடவுள் உனக்கு நியாயமானபடி தண்டனையை விதித்தால் அவர் தமது நீதியுள்ள தீர்ப்பின்படியே உன்னைத் தமது திவ்விய சமுகத்தினின்று நீக்கி அழுகையும் புலம்பலும் பற்கடிப்புமுள்ள நரகத்தில் தள்ளவேண்டியதாகும் என ஒத்துக்கொள் (மாற்கு 16: 16; ரோமர் 1: 18; 2: 3-11). இவ்விதமாய் உன்னைப்பற்றிப் பேசுவது உனக்குக் கஷ்டமாயினும் இது சத்தியமே. இது உண்மை என நீ நம்புகிறாயா? இது சத்தியந்தான் என ஒத்துக்கொண்டு கடவுளிடம் அறிக்கையிட ஆயத்தமா? உன் முழு நெஞ்சத்தோடும் நீ "ஆ, கடவுளே! நான் ஒரு குற்றவாளி, சீர்கெட்டவன், சக்தியற்றவன், நரகத்திற்கே பாத்திரமான பாவி" என்று சொல்லச் சித்தமாயிருக்கிறாயா?

ரண்டாவது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிலுவையிலே மாண்டு இரட்சிப்பைச் சம்பாதித்ததைப்பற்றிய நற்செதியை நம்புவாயாக.

அதாவது, உன்னை இரட்சிக்கும் பொருட்டே இயேசு சிலுவையில் மரித்தார் எனக் கடவுளின் திருவேதம் கூறுவது உண்மை என்று நீ ஒத்துக்கொள்ளவேண்டும்.

(1) ஆண்டவராகிய இயேசு உனது பயங்கரமான பாவ நிலைமையை அறிந்தும் உன்னில் அன்பு கூர்ந்தார் என்று விசுவாசி. தேவகுமாரன் உன்னில் அன்புகூர்ந்து உனக்காகத் தம்மைத்தாமே ஒப்புகொடுத்தார் என்பது எத்தனை பாக்கியமும் உண்மையுமான சத்தியம் (கலா. 2: 20). பாவிகளாகிய நமதுபேரில் வைத்த அன்பினாலே அவர் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் விண்ணுலகை விட்டு இம்மண்ணுலகில் வந்தார் (2 கொரி. 8: 9). "பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" என்பதாக ஒரு சமயம் தம் சீடரிடம் இயேசு கூறினாரல்லோ! (யோவான் 15: 9), மேலும், "தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம்" என யோவான் அப்போஸ்தலன் மொழிந்ததைக் கவனிக்க (1 யோவான் 4: 16), நாமும் இவ்வாறு சொல்லக் கூடுமானால் எத்தனை சந்தோஷமாயிருப்போம்! நீ எப்பேர்பட்ட பாவியாயினும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உன்னில் அன்புகூருகிறார் என்று அறிந்து விசுவாசிக்கிறாயா?

(2) ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கல்வாரிச் சிலுவையில் உன் பாவங்களையெல்லாம் தமது சரீரத்திலே சுமந்து தீர்க்கும்படியாக மரித்தார் என விசுவாசி.

மற்றவர்களின் பாவங்களை நீ நினையாமல் இவ்வுலகில் நீ ஒருவனே பாவி என்பதாக எண்ணி உன் பாவதோஷங்களை யெல்லாம் சிந்தனை செய்யக் கடவாய். இயேசுநாதர் யாருடைய பாவங்களைச் சிலுவையில் சுமந்தார் என்று நீயே உன்னிடமே கேட்டுக்கொள். "அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்" எனச் சத்தியவேதம் உரைக்கிறது (1 பேதுரு 2: 24). யோவான்ஸ்நானகன் கிறிஸ்துவைக் குறித்துக் கூறிய சாட்சியமாவது; "இதோ! உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ

ஆட்டுக்குட்டி'' என்பதே (யோவான் 1: 29). மீண்டும், ஏசாயா 5ல்: "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்'' என எழுதியிருக்கிறது. "நம்முடைய'' என்னும் வார்த்தைக்குப் பதிலாக "என்னுடைய'' என்னும் வார்த்தையை வைத்து நீ வாசிப்பாயாகில் இயேசு சிலுவையில் யாருடைய பாவங்களைச் சுமந்தார் என்னும் கேள்விக்குப் பதில் இன்னதெனக் கண்டு கொள்ளுவாய்.

எந்த விசுவாசியும் தேவனுடைய திருவார்த்தைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு உண்மையோடு சொல்லக் கூடியதாவது; "கர்த்தராகிய இயேசு என் பாவதோஷங்கள் யாவையும் அறிந்து, அவைகளைத் தமது சரீரத்திலே சுமக்கவும், அவைகளுக்கேற்ற தண்டனையடையவும் தக்கதாய் என் பாவங்களை எல்லாம் தம்மேல் ஏற்றிக்கொண்டு தம்மைத்தாமே ஈனச்சிலுவையில் வலிய ஒப்புக் கொடுத்தார். ஆகவே, கிறிஸ்து என் பாவங்களினிமித்தம் மரித்தார். நான் அனுபவிக்கவேண்டிய தண்டனையாவையும் அவர் அனுபவித்த படியால், நான் பாவப் பழியினின்று விடுதலையானேன்'' என்பதே.

மேற்கூறியவைகளைத் திரும்பவும் கவனத்தோடு வாசித்து ஆண்டவராகிய இயேசுவைக் குறித்து நீ இவ்வாறு உண்மையாய்ச் சொல்லக்கூடுமா? இதுவே கடவுளின் நற்செய்தியை விசுவாசிப்பதாகும். இதை வேறொருவர் உன்னிமித்தம் விசுவாசிக்க முடியாது. உனக்காக நீயே சுவிசேஷத்தை விசுவாசிக்கவேண்டியது அவசியம். நீ அவ்வாறு செய்யமாட்டாயா? தேவன் உன் அக்கிரமங்களை எல்லாம் இயேசுவின் மீது சுமத்தினார் என்றும், கிறிஸ்து உன் பாவங்களுக்குரிய ஆக்கினை யாவையும் சுமந்து தீர்த்தார் என்றும் நீ விசுவாசிப்பாயானால் நீ அதற்குமேல் செய்யவேண்டியது ஒன்றுமே இல்லை. இது மிகத் தெளிவு அல்லவா? கிறிஸ்து இரட்சிப்புக்குரிய யாவற்றையும் செய்து முடித்தார். ஆனதினால் நீ இம்மாபெரும் செயலுக்காக அவருக்கு நன்றி சொல்லவும், அவர் ஆற்றிய இரட்சிப்பின்பேரில் திட நம்பிக்கையுள்ளவனாய்ச் சார்ந்திருக்கவும் கூடாதா? இதைப் படிக்கும் நண்பனே, நீ கீழ்க்காணும் கவியை உண்மையாய்ப் பாடக்கூடுமா?

நான் நம்புவேன், நான் நம்புவேன்;
இயேசு எனக்காய் மரித்தார்;
பாவம் நீங்கச் சிலுவையில்
உதிரம் சிந்தினார்.

மூன்றுவதாகக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசத்தின்மூலம் உன் சொந்த இரட்சகர் என ஏற்றுக்கொள்.

நீ அவரை உண்மையாகவே ஏற்றுக்கொண்ட மாத்திரத்தில் இரட்சிக்கப்படுவாய். "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது இரட்சிக்கப்படுவாய்" என்னும் வாக்கியத்தின் தாற்பரியம் இதுவே. "கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தல்" என்றால் என்ன? இதைத்தேவன் தமது சத்தியவேதத்தில் பலவிதத்தில் விளக்கிக் காட்டியிருக்கின்றார். உதாரணமாக,

1. *கிறிஸ்துவை விசுவாசித்தல் அவரிடம் வருதலாகும்.*

"வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என இயேசு சொன்னார் (மத். 11: 28). இதைச் சற்று திருஷ்டாந்தப் படுத்துவோம். நடக்கப் பழகுகிற ஒரு சிறு குழந்தை இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். குழந்தை கால் ஊன்றித் தரையில் நிற்கும்படி தகப்பன் அதை நிறுத்திப் பிடித்துக்கொள்ளுகிறான், தாய் சிறிது தூரத்தில் முழங்கால்படியிட்டுத் தன்கைகளை நீட்டிப் பிள்ளையைப் பார்த்து "வா" என அழைக்கிறாள். பிள்ளை தாய் தன்னை அணைத்துக்கொள்வாள் என நம்பி இரண்டொரு அடி எடுத்து வைத்தவுடன் தாயின் மடியில் விழுகிறது.

இதைப்போன்றே கர்த்தராகிய இயேசுவும் உன் சரீர கண்களுக்குத் தோன்றுமற்போயினும் தமது கரங்களை விரித்து நின்றுகொண்டு உன்னைத் தம்மிடம் வரும்படி அழைக்கிறார். உன் பாவப் பாரத்தை நீக்கி உனக்கு இளைப்பாறுதல் தருவதாக வாக்களிக்கிறார். அவரது அன்பார்ந்த அழைப்புக்கிணங்கி விசுவாச நடக்கையின் முதல் அடியை எடுத்துவைத்து நீ இருக்கிறபிரகாரமே (அதாவது உன் பாவப் பாரத்தோடு) அவரிடம் வா. இப்படி நீ வருவாயானால் அவர் உண்மையுள்ள இரட்சகர் என்று அறிந்துகொள்வாய். அதுவுமன்றி, மிகவும் அருமையான ஆத்தும இளைப்பாறுதலே உன் பங்காய் இருக்கும். அவர் குற்றஞ்சாட்டும் மனச்சாட்சியினின்றும், வரப்போகும் நியாயத்தீர்ப்பின் பயங்கரத்தினின்றும் உன்னை இரட்சித்துக் கொள்ளும்படி நீ முற்காலத்தில் எடுத்த வீண் முயற்சிகளினின்றும் உன்னை முசிப்பாற்றுவார். ஆகவே, மெய் விசுவாசத்தின் அர்த்தம் யாதெனில் இயேசுவினிடம் வருவதேயாம்.

2. கிறிஸ்துவை விசுவாசித்தல் அவரை ஏற்றுக் கொள்ளுதலாகும்.

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (யோவான் 1; 12). இவ்வாக்கியத்தையும் ஒரு உதாரணத்தால் விளக்குவோம். இன்று நீ பிறந்த நாள் என வைத்துக்கொள்வோம்; உன் பெற்றோர் உனக்கு வெகுமதியாக ஒரு கடிகாரம் வாங்கியிருக்கிறார்கள். தகப்பனார் அக்கடிகாரத்தை உனக்குக் கொடுக்கத் தம் கையை நீட்டி: "மகனே, இதோ, நாங்கள் அன்போடு உனக்குக் கொடுக்கிற பிறந்த நாள் வெகுமதி" எனச் சொல்லுகிறார். நீ அந்தக் கடிகாரத்தை உனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள என்ன செய்ய வேண்டும்? அதைப் பெற்றுக்கொள்ளவேண்டுமே. ஆம், நீ அவ்வாறு செய்தல் அவசியம். உன் தகப்பனார் கடிகாரத்தை உனக்குக் கொடுக்கிறதாகச் சொல்லும் வார்த்தைகளை உண்மையாய் நம்பினால் உன் கையை நீட்டி அக்கடிகாரத்தைப் பெற்றுக் கொண்டு அவருக்கு நன்றி சொல்லுவாய் அல்லவா? இவ்வாறே தேவன் தம் நேசகுமாரனை இரட்சகராக உனக்கு அளித்து; "நீ எனக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து நித்திய மரண ஆக்கினைக்குப் பாத்திரனாயினும், என் குமாரன் உன்னை இரட்சிக்கும்படியாகக் கல்வாரிச் சிலுவையிலே உன்பாவங்களை யெல்லாம் சுமந்து, உனக்குப் பதிலாக மரித்தார். இப்பொழுது நான் அவரை உனக்கு இரட்சகராகத் தருகிறேன். நீ அவரை இப்பொழுதே உன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுகிறாயா?" என்கிறார். இதற்கு நீ என்ன பதில் கூறுவாய்? "கர்த்தராகிய இயேசுவே, உம்மை என் சொந்த இரட்சகராக என் இருதயத்தில் இப்பொழுது ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்று உன் முழு நெஞ்சத்தோடும் பதில் உரைப்பாயா? இவ்விதமாக விசுவாசிப்பது கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுதலாகும்.

3. கிறிஸ்துவை விசுவாசித்தல் அவரை நம்பிச் சார்தலாகும்.

பவுல் அப்போஸ்தலன் எபேசு பட்டணத்திலுள்ள விசுவாசிகள் தாங்கள் இரட்சணியமடையக் கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்ததை அவர்களுக்குப்பின்வருமாறு நினைப்பூட்டுகிறார்: "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானீர்கள்" (எபேசியர் 1:13) என்கிறாரே. இதற்கும் ஓர் உதாரணம் கூறுவோம். உன்னிடம் திரண்ட ஆஸ்தி இருக்கிறது என

...ரட்...வைத்துக் கொள்வோம். ஒருவரும் அதைக் கொள்ளையிடாதபடி நீ ...சயஅதை உன்னிடம் வைத்துக்கொள்ள மனமில்லை. உனக்குத் தெரிந்த ...ம் ...ட்டிக்காரன் ஒருவர் இருக்கிறார். அவர் மிகவும் உண்மையுள்ளவர் ...மா, என்றும் அவரது கடையில் மிகவும் பலத்த அறைகள் உண் ...டென்றும் உனக்கு நம்பிக்கையுண்டு. உனக்கு அவர்பேரில் அப்படிப் பட்ட நம்பிக்கையிருப்பதால் நீ என்ன செய்வாய்? நான் என் பணத்தை அவரின் பாதுகாப்புக்கு ஒப்புக்கொடுப்பேன் எனப் பதில் கூறுவாயே. அதாவது, அவரை நம்பிச்சார்ந்தே அவர்மேல் நீ வைத்த விசுவாசத்தை ரூபகாரப்படுத்திக் காட்டுவாய். இப்படியே, நீ கர்த்தராகிய இயேசுவினிடம் நம்பிக்கை வைத்து, சிலுவையில் அவர் உனக்காகச் செய்த இரட்சணியக் கிரியையில் சார்ந்து அந்த ஆத்தும இரட்சணியத்தை அடையும்படி உன்னை அவரிடம்ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நீ இப்பொழுதே அப்படிச் செய்யமாட்டாயா? உன் முழு இருதயத்தோடும் பின்வரும் கவியைப் பாடுவாயா?

> நான் பாவிதான், — ஆனாலும் நீர்
> மாசற்ற இரத்தம் சிந்தினீர்,
> வா என்று என்னைக் கூப்பிட்டீர்;
> என் மீட்பரே வந்தேன்,

நீ உண்மையாகவே கிறிஸ்துவினிடம் வந்து அவரை உன் சொந்த மீட்பராக ஏற்றுக்கொண்டு இரட்சிப்படைய அவரில் நம்பிக்கைவைக்கும் தருணத்திலேயே இரட்சிக்கப்படுவாய். நாம் இதை எப்படி அறியலாம்? எப்படியெனில் "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்" என்று தேவன் தெளிவாய் உரைத்திருக்கிறாரே! (அப். 16: 31). ஆகவே, விசுவாசித்தல் என்பது கிறிஸ்துவைச் சார்வதேயாம்.

நான்காவதாகக் கிறிஸ்து உன் ஆண்டவர் என உலகத்தார்முன் அறிக்கை செய்.

அநேகர் இவ்விஷயத்தில் தவறிப் போவதால் கடவுளின் இரட்சணியத்திற்குரிய ஆனந்தத்தைச் சரிவர அனுபவிக்கிறதில்லை. ஆகையால், சத்தியவேதம் நம்மைக் கீழ்க்காணுமாறு எச்சரிக்கின்றது: "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும்; இரட்சிப்புண்டாக வாயினலே அறிக்கை பண்ணப்படும்'' (ரோமர் 10: 9, 10) என்பதே. இதற்கிசைய, இயேசுநாதர் தாம் இரட்சித்த ஒருவனிடம்: "நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி உனக்குச் செய்தவைகளை யெல்லாம் அவர்களுக்கு அறிவி என்று சொன்னர்'' (மாற்கு 5:19).

கிறிஸ்துநாதரை ஆண்டவர் என அறிக்கை செய்வது என்றுல் என்ன? அவரே என்னைச் சொந்தமாகக்கொண்டவர் என்றும் என்னை ஆளுகிற அரசன் என்றும் மற்றவர்கள் முன்னிலையில் கூறுவதே யாம். மேலும், அவர் சொற்படியே செய்வதும் அவர் அனுப்பும் இடத்திற்கே செல்வதும் அவர் சித்தப்படியே ஜீவிப்பதும் இயேசுவை அறிக்கையிடுதலின் அம்சங்களாம். இயேசுவே நமக்குப் பிரதான மும் அவரது சித்தம் நமது பிரமாணமுமாயிருத்தல் வேண்டும். "நீங்கள் உங்களுடையவர்களல்ல..............கிரயத்துக்குக் கொள்ளப் பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினலும் உங்கள் ஆவியினலும் தேவனை மகிமைப் படுத்துங்கள்'' (1. கொரி. 6: 19,20) எனச் சத்தியவேதம் கூறுவதை நாம் அறிந்துணர்ந்து அதற்கு உடன்பட்டு ஜீவித்தல் வேண்டும். இப்படி யிருக்கிறபடியால் நாம் உலகத்தின் ஆசாபாசங்களுக்கு விலகி யிருந்து மற்றவர்களுக்கு முன் நாம் கிறிஸ்துவை நம் இரட்சக ராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டோம் எனத் தைரிய மாய்ச் சாட்சி பகரவும் வேண்டும்.

கடவுள் அருளும் இரட்சணியத்திற்குரிய நிச்சயம்.
அல்லது
நாம் இரட்சிக்கப்பட்டோம் என எப்படி அறியலாம்?

கிறிஸ்துவை விசுவாசித்த ஒருவன் தான் இரட்சணியமடைந் ததாக நிச்சயமாய் அறிந்துகொள்ளக் கூடுமா? ஆம், ஆண்டவரா கிய இயேசு கிறிஸ்துவை நம்பி நடக்கிற எவனும் தான் இரட்சிக்கப் பட்டதாகவும், தன் பாவம் மன்னிக்கப்பட்டதாகவும், தான் நித்திய ஜீவனைப் பெற்றதாகவும் அறிந்துகொள்ளும் திவ்விய சிலாக்கிய முடையவனயிருக்கிருன். இதற்காக நாம் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோமாக.

மேற்படி அறிவை நாம் எப்படி அடையக்கூடும் என்று கேட் டால் மாருததும் தவருததுமான சத்தியவேதமே இவ்வறிவைப்

ரட் கட்டக்கூடும் என்போம். கிறிஸ்துநாதர் சிலுவைமீது ஆற்றிய ய இரட்சணியக்கிரியை விசுவாசியை இரட்சித்துக் காப்பாற்றுகிறது; க அந்தத் திவ்விய ஆற்றலே அவனுக்கு வெளிப்படுத்துகின்ற தேவவச னமோ அவன் அடைந்த இரட்சணியத்தைக் குறித்த அறிவை நிச்சயப்படுத்துகிறது. இவ்விஷயத்தை நன்கு கவனிக்க.

இதற்கு ஆதரவாக ஒரு வேத வாக்கியத்தை எடுத்துக் காட்டுவோம். அதாவது, "உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறிய......தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்" (1 யோவான் 5 : 13) என்பதே. இவ்வசனம் யாருக்கு எழுதப்பட்டது? தேவகுமாரனில் விசுவாசம் வைத்தவர்களுக்கு அல்லவா? அப்படிப்பட்டவர்களில் நீயும் ஒருவனா? நீ கிறிஸ்துவினிடம் சென்று விசுவாசத்தைக்கொண்டு அவரை உன் இரட்சகராக ஏற்றுக்கொண்டாயா? அப்படியானால் உனக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீயும் நிச்சயமாய் அறியலாம். கிறிஸ்துவில் விசுவாசமாயிருக்கிற எவனுக்கும் நித்திய ஜீவன் உண்டென்று இத்தனை உறுதியாய்க் கூறுபவர் யார்? பொய்யுரையாத கடவுளே மேற்படி வேதவாக்கியத்தின் மூலம் இவ்வண்ணம் சாதிக்கிறாராகையால் நாம் இதைக் குறித்துக் கிஞ்சித்தேனும் இனி சந்தேகப்படுவானேன்? இதை விடப் போந்த ஆதாரம் வேறு உண்டோ?

நாம் அறிந்துகொள்ளவேண்டிய சகலவித சத்தியங்களையும் சத்திய வேதத்தின் மூலமாயன்றி மற்றெவ்விதத்தினாலும் அறிவது அசாத்தியம். உதாரணமாக, நாம் சீர்கெட்டுப்போன படுபாவிகள் என்றாவது தேவன் நம்மில் அன்பு வைத்து நமக்காக மரிக்கும் பொருட்டுத் தம் குமாரனை அனுப்பினாரென்றாவது கிறிஸ்துநாதரே இரட்சகர் என அவரைச் சார்ந்துகொண்டால் இரட்சிப்படைவோம் என்றாவது கடவுள் நமது பாவங்களை மன்னித்து நமக்கு நித்திய ஜீவனை அளித்து இரட்சித்தார் என்றாவது நாம் எப்படி அறியமுடியும்? அருள்வேதத்தைப் படிப்பதினால்தானே, சத்தியவேதமில்லாவிடில் நாம் நமது ஆத்தும நிலைமைக்குரிய எந்தவித அறிவும் அடைய முடியாது என்பது திண்ணம்.

இவ்விஷயத்தைப் பின்னும் சற்று விளக்குவோம். பல சரக்குக்கடையில் ஒருவன் தனக்குள்ள பாக்கியைச் செலுத்திவிட்டான் என்று வைத்துக்கொள்வோம். உமது கடன் தீர்ந்தது என்றும் நீர் கடனிலிருந்து விடுதலையானீர் என்றும் நீர் எப்படி சொல்லக்

கூடும்? இது எப்படி உமக்குத் தெரியும் என்பதாக ஒருவன் அவனை விஞவினுல் அவன் என்ன பதிலுரைப்பான்? தான் பெற்ற ரசீதை எடுத்துக்காட்டி: "இதோ! ரசீதைப்பாருங்கள். இதுவே என் கடன் தீர்ந்ததற்குப் போதுமான ரூபகாரம்" என்பானே. அவன் கட்டவேண்டிய தொகையைச் செலுத்தினதினுல் விடுதலையானுன். அவன் பெற்ற ரசீது அவன் விடுதலையானதற்குப் போந்த அத்தாட்சியாகையால் தன்கடன் தீர்ந்தது என நிச்சயமான அறிவடைந்தான் இதைப் போன்று பின்வரும் திருஷ்டாந்தத்தைக் கவனிக்க. ஏதோ ஒரு குற்றஞ் செய்து காவல் கூடத்தில் அடைபட வேண்டும் என்ற தீர்ப்புப்பெற்றுள்ள ஒருவன் இருந்தான் என வைத்துக்கொள் வோம். ஆனுலும் தேசத்தின் அதிபதி அவனுக்குக் குற்றத்தை மன்னித்து விடுதலைப்பத்திரம் கொடுத்தார். அதைப் பெற்றவனுக்கு அளவற்ற சந்தோஷமுண்டாயிற்று. ஒருவன் அவனிடம்: "நீ. மன்னிப்பும் விடுதலையும் பெற்றதாக உனக்கு எப்படித் தெரியும்" எனக் கேட்டால் என்ன சொல்லுவான்? "என்மனதில் நான் அறியாமலே ஏதோ ஒரு சந்தோஷம் உண்டாகிறது" என்பானே? இல்லையே. அதிபதி தனக்கு அளித்த விடுதலைப் பத்திரத்தைக் காட்டி: "இதோ, படித்துப் பாருங்கள், இதுவே என் சந்தோஷத் திற்கு ஆதாரம் என்பானல்லவா?

வெறும் உணர்ச்சி ஒருவனையும் இரட்சிக்காது. முன் கூறிய உதாரணத்தைத் திரும்பக் கவனிப்போம். அந்தக் குற்றவாளியின் ஆனந்தத்திற்கு ஆதாரம் எது? அவன் விடுதலைக்கு அவன் மனதில் தோன்றிய சந்தோஷம் காரணமா? அல்லது அவன் விடுதலையான தே அவனுக்குண்டான பெருஞ் சந்தோஷத்திற்குக் காரணமா? விடு தலை சந்தோஷத்தின் ஆதாரமேயொழிய உண்டான சந்தோஷம் விடுதலைக்கு ஆதாரமல்லவே!

இதைப்போலவே, ஒருவன் இரட்சிக்கப்பட்டதினுல் ஆனந்திக் கிருனு, அல்லது தன் மனதில் அதைப்பற்றி ஏதோ ஒருவிதமான சந்தோஷமுண்டாகிறதினுல் இரட்சிக்கப்படுகிருனு? இரட்சணியமே ஆத்தும சந்தோஷத்துக்கு ஆதரவேயொழிய வெறும் உணர்ச்சி அதற்கு ஆதாரமல்ல எனத்திட்டமாய் அறிதல் அவசியம். - இரட் சணியமடைந்தேன் என்கிற உணர்ச்சி எனக்கு இருந்தாலுஞ்சரி இல்லாவிட்டாலுஞ்சரி நான் இரட்சிக்கப்பட்டதும் படாததுமாகிய அறிவே வேண்டும். அந்த அறிவு தேவவசனத்தினுல்மட்டும் உண் டாகக்கூடும்.

சில விசுவாசிகள் இவ்விஷயமாய்த் தவறுகிறார்கள். எப்படியெனில் அவர்கள் சந்தோஷமாயிருக்கும்போது மட்டும் தாங்கள் இரட்சிக்கப்பட்டதாக நினைக்கிறார்கள். சஞ்சலத்தில் மூழ்கியிருக்கும் சமயங்களிலோ தங்கள் இரட்சிப்பைக்குறித்துச் சந்தேகப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்கள் உள்ளத்தில் மாறிக்கொண்டேயிருக்கிற உணர்ச்சிகளை நம்பாமல் கடவுள் சத்தியவேதத்தின் மூலம் கூறும் உறுதியான சத்தியங்களை நம்பிச் சார்ந்துகொண்டால் எவ்வளவோ நலமாயிருக்கும்!

கிஞ்சிதமும், நெஞ்சே, அஞ்சிடாதே;—நல்ல
கேடகத்தைப் பிடி நீ;—விசுவாசக்
கேடகத்தைப் பிடி நீ.

கடவுள் அருளும் இரட்சணியத்திற்குரிய நிச்சயம் இன்னதெனக் காட்டும் வேறு சில வேதவாக்கியங்களைக் கூறுவோம். இயேசு தாமே: "என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு, அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்" என்று மொழிந்தார் (யோவான் 5: 24). இவ்வசனம் உணர்ச்சியைக் குறித்து ஏதாவது குறிக்கிறதா? இல்லையே. இந்தத் திவ்விய மொழியில் நாம் நம்பவேண்டிய சத்தியங்கள், ஏற்றுக்கொள்ள வேண்டிய இரட்சகர், அனுபவிக்கவேண்டிய இரட்சணியம் ஆகிய இவைகளே காணப்படுகின்றனவல்லவா? நீ அவருடைய திருவசனத்தைக் கேட்டு வாஸ்தவத்தில் அவரில் விசுவாசம் வைத்ததுண்டானால் நீயும் நித்திய ஜீவனுக்கு ஆளானாய்; இனி ஆக்கினைத் தீர்ப்புக்குட்படமாட்டாய்; மரணத்தை விட்டு நீங்கி நித்திய ஜீவனுக்குட்பட்டிருக்கிறாய் என்று நிச்சயமாய் அறிந்துகொள்.

ஆண்டவராகிய இயேசு மொழிந்த வேறொரு வசனத்தையும் கவனிக்க. அது என்னவெனில்: "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருகாலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை" என்பதே (யோவான் 10: 27, 28). இது விசுவாசிகள் ஒருகாலும் நாசமடையாமல் நித்தியகாலமாகப் பத்திரமாய்க் காக்கப்

படுவதாக ஆண்டவர் கூறும் உறுதிமொழி. இவ்வசனத்திலும் நெஞ்சத்தின் உணர்ச்சியைக் குறித்து ஒன்றுமே காணப்படுகிறதில்லை என்பதையும் கவனிக்க.

பின்னொரு வேத வாக்கியத்தையும் சற்று கவனித்துக்கொள்வோம். "ஆதலால் சகோதரரே, இவர்மூலமாய் உங்களுக்குப் பாவ மன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறதென்றும்......... விசுவாசிக்கிறவன் எவனும் இவராலே விடுதலையாகி நீதிமானுக்கப் படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது" (அப். 13: 38, 39). இவ்வாக்கியத்திலும் எந்தவிதமான சந்தேகத்திற்கு இடமில்லையே, விசுவாசியானவன் கடவுள் முன்னிலையில் இப்பொழுதே நீதிமானுகப் பாவிக்கப்படுகிறான் என்பதாக வெகு திட்டமாய்ச் சாதித்திருக்கிறதே.

நீ இரட்சணியத்திற்குரிய நிச்சயத்தைக் குறிப்பிடுகின்ற வேறு சில வேதவசனங்களைப் படிக்க விரும்பினால் கீழ்க்காண்பவைகளைப் படிக்கலாம்:—யோவான் 3: 36; 6: 47; 14:1—3; 20: 31; அப். 10: 43; ரோமர் 5: 1; 8: 28—39; 1 கொரி. 6: 11; கலா. 2: 16; எபே. 1: 3—7; 2: 8—18; கொலோ. 1: 12-14; 1 பேதுரு 1: 3—5; 1 யோவான் 2 : 12 முதலியன. நீ இவைகளை மனனஞ்செய்து விசுவாசித்து உன் இருதயத்தில் பத்திரப்படுத்தினால் இரட்சணியத்திற்குரிய நிச்சயம் உனக்கு உண்டாகும்.

இரட்சிப்பின் மூன்று முக்கிய அம்சங்கள் இன்னின்னதென நன்கு அறிதலோடுகூட அவைகளின் வரிசைக்கிரமம் இன்னதெனவும் கவனித்தல் அவசியம். அவையாவன.—உண்மை, நம்பிக்கை, உணர்ச்சி என்பவைகளே. எல்லாவற்றிற்கும் ஆதாரமானது கிறிஸ்துநாதர் சிலுவையில் ஆற்றிய இரட்சணியக் கிரியையாகிய **உண்மை.** இதுவே முதன்மையான சத்தியம், நாம் இதை நம்பினாலுஞ் சரி நம்பாமற்போனாலும் சரி எந்நாளும் உண்மையே உண்மை. "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்" (1 கொரி. 15: 3) என்பது மாறாத சத்தியம்; இதுவே சுவிசேஷத்தின் பிரதான கொள்கை. இரண்டாவதாக, விசுவாசம் காணப்படவேண்டும். அதனால் ஒருவன் மேற்படி உண்மையை நம்பிக் கிறிஸ்துவை இரட்சகர் எனச் சார்ந்து இரட்சணியம் அடைகிறான். கடைசியாக மேற்படி **உண்மையை விசுவாசித்ததின்** விளைவாக இரட்சிப்பினால் உண்டாகும் **உணர்ச்சி** ஏற்படும். சத்தியவேதம் புகட்டும் இரட்சிப்பின் நிச்சயம் இதுவே, இந்த வரி

சக்கிரமத்தை மாற்றினால் எல்லாம் பங்கப்பட்டுப்போகும். விசுவாசம் பிரதானமல்ல, கிறிஸ்துநாதர் ஆற்றிய திவ்விய கிரியையே பிரதானம்; உணர்ச்சியும் அதிமுக்கியமல்ல, ஆத்தும இரட்சிப்பை அனுபவித்ததின் பயனாக அதற்குரிய உணர்ச்சி இருதயத்தில் இயல்பாகவே உண்டாகவேண்டியதே யொழிய எந்தவிதமான பக்தியுள்ள உணர்ச்சியாகிலும் ஒருவனை இரட்சிக்காது.

சிலர் விசுவாசத்தையே பிரதானமாகப் பாராட்டுகிறார்கள். தங்களுக்கிருக்கும் விசுவாசம் பலிக்கக்கூடியதோ என்றும் போதுமானதோ என்றும் நினைக்கின்றனர். இது மிகத்தவறு; ஏனெனில் நம்மை இரட்சிப்பது நமது விசுவாசம் அல்ல, **கிறிஸ்துவே** நம்மை இரட்சிக்கிறார். நாம் கொண்ட நம்பிக்கை சிறிதோ பெரிதோ அது காரியமல்ல, நாம் நம்பியிருக்கும் இரட்சகராகிய திவ்விய புருஷனே இரட்சணியத்துக் காரணர். நம்பமுடியாத ஒரு வட்டிக்கடையை நான் அதிகமாய் நம்பி என் ஆஸ்தியை அதில் வைத்தால் என் பொருளை இழந்துவிடுவேன். ஆனால், யாவரும் நம்பக்கூடிய ஒரு வட்டிக்கடையில் நான் எப்பேர்ப்பட்ட அற்ப நம்பிக்கையோடு என் ஆஸ்தியை அதில் வைத்தாலும் பத்திரமாகவே இருக்கும். என் நம்பிக்கையல்ல, வட்டிக்கடையின் நிலைமையே பிரதானம்!

மேற்படி இரட்சணிய ஒழுங்கைப் பங்கப்படுத்தும்படி பிசாசு பல எத்தனம் பண்ணுவான். உதாரணமாக, நாம் கிறிஸ்துவையும் அவர் ஆற்றிய இரட்சிப்பின் திவ்விய செயலையும் பாராட்டாமல் நம்மையும் நமது விசுவாசம் முதலிய நற்கிரியைகளையுமே பாராட்ட நம்மைத் தந்திரமாய் ஏவிவிடுவான். நாமோ இந்த வஞ்சனைக்கு எச்சரிக்கையாயிருந்து நம்மையும் நமது நம்பிக்கை, உணர்ச்சி முதலியவைகளையும் முக்கியமாய் எண்ணாமல் சத்திய வேதம் இரட்சிப்பைக் குறித்துக் கூறும் சத்தியங்களையே நம்பிச் சார்தல் அவசியம். நாம் அப்படிச் செய்தால் மட்டும் இரட்சணிய நிச்சயமுடையவர்களாக ஜீவிப்போம்.

“வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை” என்று இயேசுநாதர் திருவாய் மலர்ந்தருளினார் (மத். 24: 35). இவ்வசனத்தை உறுதியாய் நம்பின ஒரு வயோதிபக் கிறிஸ்தவ அம்மாள் சொன்னதாவது: “நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்கிற நிச்சயம் எனக்கு உண்டு, ஏனென்றால் தேவன் தமது திருவேதத்தில் என்னை இரட்சிப்பதாக வாக்களித்திருக்கிறாரே” என்பது. அதைக் கேட்டு ஒருவன்: சரி, கடவுள் தம்

முடைய வாக்கின்படி உனக்குச் செய்யாவிட்டால் உன் கதி என்ன வாகும்? என வினவினன். அதற்கு அம்மாது: "வாஸ்தவந்தான், கடவுள் தாம் சொன்னபடி செய்யாவிட்டால் நான் அழிந்துபோவேன். ஆனால் எனக்கு உண்டாகும் பிராண நஷ்டத்தைவிட அதினால் கடவுளுக்கு உண்டாகும் நஷ்டமே பெரிது" என்றாள். அந்த அம்மாளின் விசுவாசத்தைப் புரட்ட முயன்றவன் பின்னும் அவளைப் பார்த்து: "அது எப்படியாகும்? கடவுளுக்கு எப்படி நஷ்டம்" எனக்கேட்டான். அதற்கு அவள்: "அப்படிச் சம்பவித்தால் என் ஆத்துமம் அழிந்துபோவதோடு கூட சத்தியபரரான கடவுள் பொய்யராவாரே. இந்தப்பாவி அழிவது பெரிய காரியமா? பொய்யுரையாத பூரண சற்குணக் கடவுளின் உத்தமத் தன்மை கெட்டுப் போவது பெரிய காரியமா" என்று கூறி அவ்வேதப்புரட்டனை வாயடைத்தாள். ஆம், அம்மாது சாதித்தது உண்மையே. "பொய்யுரையாத தேவன் ஆதிகாலமுதல் நித்திய ஜீவனைக்குறித்து வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்" (தீத்து 1:3). "நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே" (எபி. 10: 23). இப்படியிருக்க, இதைப் படிக்கும் நண்பனே, கடவுளின் உண்மையான திருவசனத்தை நம்பிச் சார்ந்து உன் நித்திய இரட்சிபைக் குறித்து எந்தச் சந்தேகமுமின்றி அமர்ந்திரு.

ஒருவன் உண்மையாக இரட்சிப்பைப் பெற்றதுண்டானால் அந்த உள்ளான மனம் மாறுதலுக்குரிய அடையாளங்கள் எப்படியும் அவனது வெளி ஜீவியத்தில் காணப்படும். ஆகையால் இரட்சிப்புக்குரிய அத்தாட்சிகள் ஒருவனிடத்தில் காணப்படாவிடில் அவன் இரட்சிக்கப்பட்டவன் எனச் சாதிப்பது அரிது. பிலி. 1:5: 2:12,13 ஐப் படிக்க. மீண்டும், "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என இயேசுநாதர் கூறினார் (மத். 7:20). அதுவுமன்றி எபி. 6:9 இல் "பிரியமானவர்களே,................................ நன்மையானவைகளும் இரட்சிப்புக்குரியவைகளுமான காரியங்கள் உங்களிடத்தில் உண்டாயிருக்கிறது என்று நம்பியிருக்கிறோம்" என்று எபிரெய விசுவாசிகளிடம் எழுதப்பட்டது கவனிக்கத்தக்கதே. இவ்வசனத்தில் "இரட்சிப்புக்குரியவைகள்" என்னும் பதம் ஒருவன் தன் உள்ளத்தில் அனுபவிக்கும் இரட்சிப்பின் அந்தரங்கமான அத்தாட்சிகளையும் மற்றோர் அவனது வெளி ஜீவியத்தில் காண்கிற வெளியரங்கமான அத்தாட்சிகளையும் குறிக்கின்றது.

சத்திய வேதத்தில் இருவகையான கிறிஸ்தவர்களைக் காண்கிறோம். முதல் வகுப்பார் யாரெனில் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டும் குணப்படாத நிலைமையிலுள்ள பெயர் கிறிஸ்தவர்களே. மற்ற வகுப்பாரோ மெய்யாகவே கிறிஸ்துவையுடைய மெய்க்கிறிஸ்தவர்கள். முதலாம் பிரிவார் சுவிசேஷத்தைக் கேட்டுத் தங்கள் மனோதத்துவங்களினால் மட்டும் அதன் சத்தியங்களை ஒப்புக்கொள்ளுகிறார்கள். மற்றப் பிரிவாரோ தங்கள் சித்தத்தைக் கிறிஸ்துவினிடம் ஒப்புக்கொடுத்து அவரது ஆட்சிக்குக் கீழடங்குகிறார்கள். கிறிஸ்தவ மார்க்க அனுஷ்டானம் பேச்சில் மட்டுமல்ல தினசரி நடக்கையிலும் காணப்படும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எச்சரிப்பாகக் கூறிய பின்வரும் வாக்கியத்தை நன்கு கவனிப்போமாக: "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி **செய்கிறவனே** பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று **சொல்லுகிறவன்** அதில் பிரவேசிப்பதில்லை" (மத். 7: 21) என்பதே.

இப்படியிருக்க, தங்களை இரட்சிக்கப்பட்டவர்கள் எனச் சொல்லிக்கொள்ளுகிற பல "கிறிஸ்தவர்கள்" சீக்கிரத்தில் பின் வாங்கிப்போவது ஆச்சரியமன்று. அப்படிச் செய்வதினால் தாங்கள் போலி விசுவாசிகள் என ரூபித்துக் காட்டுகின்றனர். இவர்கள் ஒருவிதமான மன எழுச்சியையாவது உணர்ச்சியையாவது அனுபவித்திருக்கலாம். ஆனால் தங்கள் சித்தத்தைக் கிறிஸ்துவினிடம் ஒப்புக்கொடுக்கவேயில்லை என்பது திண்ணம். "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்" என இயேசுநாதர் ஒரு நாள் தம்மை விசுவாசித்த சிலரிடம் சொன்னார் (யோவான் 8:31).

இயேசு கிறிஸ்துவுக்குச் சீஷரானவர்கள் தங்கள் ஆயுசு காலமெல்லாம் நிலைத்திருந்து அவருக்கே கீழ்ப்படிந்து அவரது கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் முன்னேறிக் கொண்டே இருக்கவேண்டும். இதுவே உத்தமச் சீஷத்துவமாகும் (2 பேதுரு 3:18).

The Bapuji Press, 187, Mount Road, Madras-2.—3000/'56.

ஆத்தும ஈடேற்றத்தின் நற்பலன்

ஒருவன் கடவுள் அருளும் இரட்சணியத்தை அனுபவித்தால் அவன் "திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவன்" ஆகிறதே அதன் விளைவாகும் (2 பேதுரு 1 : 4). எனினும், அப்படிப்பட்டவனின் நெஞ்சத்தினின்று "மாம்சம்" என அழைக்கப்படும் அவனது பழைய தீய சுபாவத்தைக் கடவுள் நீக்குகிறதில்லை. அந்தத் தீதான தன்மை அவன் உயிருள்ளவரைக்கும் பூராவாக எடுபடாமல் அவனுக்குள் குடிகொண்டேயிருக்கும். ஆகவே, எந்த விசுவாசிக்கும் இரு தன்மைகள் உண்டே. இவை என்னவெனில், ஒன்று நன்மை எதுவும் செய்யாத மாம்சம் என்னும் பழைய ஜென்ம சுபாவம், மற்றொன்று ஒரு தீமையுஞ்செய்யாத ஆவி என்னும் புதிய சுபாவமாம். காரியம் இப்படி இருப்பதினால் விசுவாசியின் நெஞ்சில் ஓயாத போராட்டம் உண்டாகிறது (கலா. 5 : 17). மாம்சமானது விசுவாசியை ஆட்கொண்டு அவனது பரம பிதாவாகிய கடவுளுக்குப் பிரீதியில்லாதவைகளைச் சிந்திக்கவும், பேசவும், செய்யவும் அவனை ஏவிவிடப் பிரயத்தனிக்கிறது. அவனது புதிய சுபாவமோ அவனை ஆண்டு தேவனுக்குப் பிரீதியானவைகளை மட்டும் சிந்திக்கவும் பேசவும் செய்யவும் அவனை ஏவிவிடப் பிரயத்தனிக்கிறது.

மேற்கூறிய விஷயம் அநேகக் கிறிஸ்தவர்களுக்கு விளங்காததினால் அவர்கள் சோர்வுற்றுத் தாங்கள் இரட்சிப்பைப் பெற்றது உண்மைதானோ எனச் சந்தேகங் கொள்ளுகிறார்கள். தாங்கள் குணப்பட்டதும் பாவஞ் செய்யும் ஆசை முற்றுமாய்த் தங்களை விட்டு அற்றுப்போகும் என நினைத்தனர். ஆயினும் தங்கள் பழைய பொல்லாத ஜென்ம சுபாவம் பின்னும் மாறாமலே இருந்துகொண்டு அப்போதைக்கப்போது தங்கள் உள்ளத்தில் எழும்பி வருகிறதைக் கண்டுகொள்ளுகிறார்கள். பின்னை, கடவுளது மக்கள் தங்கள் பரம தகப்பனுருக்கும், கர்த்தரும் இரட்சகருமாகிய கிறிஸ்துவுக்கும் பிரீதியாய் ஜீவிப்பதெப்படி?

கீழ்க்காணும் உதாரணத்தை நன்கு கவனிக்க. விக்கிரக வணக்கத்தை விட்டுக் கிறிஸ்துவினிடம் திரும்பிய ஒருவன் இருந்தானாம். அவன் குணப்பட்ட பின் சிலநாள் மட்டும் அகமகிழ்ச்சியாயிருந்து அதற்கப்பால் மனச் சஞ்சலப்பட்டவனாய்த் தன் குருவினிடம் சென்று: "ஐயா, நான் கிறிஸ்துவினிடம் நம்பிக்கை வைத்துக் கொஞ்ச நாள் மிகச் சந்தோஷமாயிருந்தும் இப்பொழுது மனச் சஞ்சலப்படுகிறேன். இந்த விசனகரமான மாறுதலுக்குக் காரணமென்ன?" என்று கேட்டானாம், அதற்குக் குரு: "என்னப்பா, உனக்கு என்ன சம்பவித்தது?" என்று வினவினார். அவன்: "ஐயா, ஒரு வெள்ளை மிருகமும், ஒரு கறுப்பு மிருகமும் ஆக இரண்டு ஜீவன்கள் எனக்குள் இருக்கின்றன" என்றான். குரு

க்கு இது உடனே விளங்கவில்லை, எனினும் அவர் கொஞ்ச நேரம் யோசித்து, வெள்ளை மிருகமானது அவனது புதிய சுபாவம் என்றும், கறுப்பு மிருகமானது அவனது பழைய சுபாவம் என்றும் அறிந்துகொண்டார். ஆகையால் அவர்: "அந்த இரண்டு மிருகங்களும் என்ன செய்கின்றன?" என்று கேட்டார். கொஞ்ச நாளுக்கு முன் குணப்பட்ட அந்த விசுவாசி: "அவை பகலெல்லாம் ஒன்றோடொன்று சண்டை செய்துகொண்டே இருக்கின்றன. வெள்ளை மிருகம் கறுப்பு மிருகத்தையும் கறுப்பு மிருகம் வெள்ளை மிருகத்தையும் கடித்துக்கொண்டே வருகின்றன" என்றான். அப்பொழுது காரியம் குருவுக்கு நன்றாய் விளங்கிற்று. ஏனெனில், சத்திய வேதத்தில்: "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் ஆசிக்கிறது;..................இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது" என்று விளம்பியிருக்கிறது (கலா. 5 : 17ஐக் காண்க).

ஆகையால் குரு: "எந்த மிருகம் கெலிக்கிறது?" எனக் கேட்டார். சிஷன் சற்று நேரம் ஆழ்ந்து யோசித்துச் சொன்ன பதிலாவது: "நான் எந்த மிருகத்தைத் தூண்டி விடுகிறேனோ அதுவே மேற்கொள்ளுகிறது என்று காண்கிறேன்" என்றான். இதை நன்றாய்க் கவனிக்க. இவன் சொன்னது உண்மையே. இச்சொல்லின் கருத்தாவது; விசுவாசி தனது இரு தன்மைகளில் எந்தத் தன்மைக்கு இணங்கி நடக்கச் சித்தங்கொள்ளுகிறானோ அந்தச் சுபாவமே அவனை ஆண்டு நடத்தும் என்பதே.

மாம்சத்தில் நம்பிக்கை வைக்கவேண்டாம் என்பதாகச் சத்திய வேதம் நம்மை எச்சரிக்கிறது (பிலி. 3 : 3). எப்படியெனில், நாம் அந்தப் பழைய சுபாவத்தைச் சற்றேனும் நம்பாமலும் அதனால் நன்மை பிறக்கும் என எதிர்பாராமலும் இருப்பதே ஞானம். அந்தத் தீய குணத்திற்குரிய ஆசாபாசங்களுக்கு இடங் கொடுக்கவும் கூடாதே (ரோமர் 13 : 14). மாம்சம் எனப்பட்ட தன்மையை ஒடுக்கி அடக்கிக்கொண்டே வரவேண்டும். நாம் இது விஷயமாய் ஓயாத விழிப்புள்ளவர்களாயிரா விட்டால் மாம்ச சிந்தை நமக்குள் திரும்பவும் எழும்பி நமது ஜீவியத்தைக் கெடுத்து விடுவது நிச்சயம்.

பவுல் அப்போஸ்தலன் அறிக்கையிட்ட வண்ணமாக நாம் ஒவ்வொருவரும்: "என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லை" என ஒத்துக்கொள்ளல் வேண்டும் (ரோமர் 7 : 18). நாம் இவ்விஷயத்தைச் சரிவர அறிந்துணர்ந்தால் மாம்சமானது நமக்குள் எழும்பி நமது மனசாந்தியைக் கெடுக்கும் சமயங்களில் நாம் அதிசயப்படவேண்டுவதில்லை, மிதமிஞ்சிச் சோர்வடையவும் அவசியமில்லை. அப்படிக்கில்லாமல், கடவுள் நமக்குப்

புதிய சுபாவத்தோடு கூடத் திவ்விய ஒத்தாசையையும் தந்திரு
கிறபடியால் நாம் அவ்வொத்தாசையைப் பெற்றுச் சத்திய வேதாக
ஆராய்ச்சியினாலும் ஜெபத்தினாலும் அவருக்குக் கீழ்ப்படிவதினாலும்
நமது புதிய ஜீவனை வளர்க்கும்படி பிரயத்தனஞ் செய்வோமாக. ...ர்
அவ்வாறு நடப்போமேயாகில் மாம்ச இச்சையை நிறைவேற்றாமல் ...த்
ஆவிக்கேற்றபடி நடக்கிறவர்களாயிருப்போம் (கலா. 5 : 16).

நண்பனே, நீ ஆண்டவரைப் பற்றிக்கொண்டு அவரால் ஆனந்தமும் பிரயோஜனமுமான ஜீவியஞ் செய்ய விரும்புகிறாயா? அவரது கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர்ந்தோங்கி தேவனுக்கு மகிமையாகவும் பிறருக்கு ஆசீர்வாதமாகவும் இருக்க வாஞ்சிக்கிறாயா? இத்தகைய ஜீவியத்தின் இன்றியமையாத நிபந்தனை யாதெனில், புதிய சுபாவம் நம்மை ஆளுவதே. தேவ ஆவியின் கனி அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலா. 5 :22, 23). ஆயினும். கடவுளது பிள்ளைகள் வேளாவேளைகளில் மாம்சத்தின் ஆதீனத்தில் ஜீவிக்கிறார்கள். அவர்கள் இவ்வாறு நடந்து கொள்வதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். திருஷ்டாந்தமாக, அவர்கள் அஜாக்கிரதையினாலாவது ஜெபத்தை அசட்டை செய்வதினாலாவது சத்திய வேதத்தைப் படியாததினாலாவது கிறிஸ்துவுக்கெனச் சாட்சி பகராததினாலாவது கடவுளுக்குப் பிரீதியில்லாத பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதினாலாவது பாவஞ் செய்து மாம்ச சிந்தைக்கு இடங்கொடுக்கக்கூடும். இதன் தீமையான விளைவு பல்வகையாம். இப்படி நடப்போருக்கு மனச் சஞ்சலமும் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு வெட்கமும் கிறிஸ்துவுக்கு அவமானமும் உண்டாகின்றன.

நாம் இரட்சிப்படைந்ததின் பலன் என்னமாயிருக்கவேண்டும்? நாம் எப்படிச் சந்தோஷமும் நற்பிரயோஜனமுமான ஜீவியஞ் செய்யக்கூடும்?

முதலாவது, தேவ வசனமாகிய சத்திய வேதத்தை வரிசைக் கிரமமாக ஆராய்ச்சி செய்யவேண்டும் என்கிற வாஞ்சை நமது உள்ளத்தில் உண்டாகவேண்டும்.

தன்னைப் போஷித்து வளரச் செய்யும் தாயின் பாலைப் புதிதாய்ப் பிறந்த குழந்தை எப்படி ஆசிக்கிறதோ அப்படியே மறுஜென்மமடைந்த எவனும் தான் "வளரும்படி............... திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருத்தல் வேண்டும் (1 பேதுரு 2 : 3).

சத்திய வேதநூல் தேவ ஆவி அருளியதாகையால் அது முற்றும் சத்தியமும் தவறாத வழிகாட்டியுமான புத்தகமே (2 தீமோ. 3 : 14—17). அதன் மூலம் கடவுள் விசுவாசிகளுக்குத் தமது திவ்விய சித்தத்தைப் பூரணமாய் வெளிப்படுத்தி வருகிறார். ஆனபடியால், படிக்கத் தெரிந்த எந்த விசுவாசியும் அதை அன்றாடகமும் வரிசைக் கிரமமுமாய்ப் படிப்பது எவ்வளவோ முக்கியமானது! காலை மாலை நேரங்களில் வேதத்தைப் படிப்பதற்காகத் தகுந்த நேரம் குறித்துக் கொண்டு தவறாமலே அவ்வேளைகளில் அதைப் படித்துத் தியானிப்பது அவசியம். சத்திய வேத ஆராய்ச்சியைப் போல் வேறெந்தக் காரியமாவது ஜோலியாவது அத்தனை முக்கியமும் பிரயோஜனமுமானதல்ல. ஆகையால் எத்தக் காரியமாகிலும் அதற்குத் தடையாக நுழையாதபடி நாம் எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். கடவுள் தமது வேதத்தின் மூலம் தம் பிள்ளைகளை வேண்டும்போதெல்லாம் ஆற்றித்தேற்றி, வழி நடத்தி, திடப்படுத்தி, எச்சரித்து, கண்டித்துணர்த்துவதினால் பரிசுத்த நல்லொழுக்கத்தில் தேர்ச்சியடையச் செய்கின்றார். ஆகவே, விசுவாசிகள் வேத நூலைக் கொண்டே தேவசித்தம் இன்னதென நாளுக்கு நாள் படித்தறிந்து கொள்ளலாம்.

சத்திய வேதத்தை அசட்டை செய்பவன் ஆவிக்குரிய விஷயத்தில் பின் வாங்கிப்போனான் என்றும், தன் பழைய சுபாவத்திற்கு இணங்கி நடந்து வருகிறான் என்றும் திட்டமாய் தெரிகிறது. ஏனெனில் மாம்ச சிந்தையானது சத்திய வேதத்தில் பிரியப்படுகிறதில்லை. புதிய ஆவிக்குரிய தன்மையோ அதை நாடி உட்கொண்டு அதனால் வளருகின்றது. இப்படியிருக்க, மேலே சொல்லியபடி, நாம் ஒவ்வொருவரும் தேவ வசனத்தைத் தினந்தினம் காலை மாலை நேரங்களில் தவறாமலே படிக்கும்பொருட்டுத் தகுந்த ஏற்பாடு செய்ய உறுதியாய்த் தீர்மானிப்போமாக.

இது விஷயமாகச் சில புத்திமதிகளைக் கூறுவோம் அவையாவன:

(1) தேவநாபக்தியுடன் வேதநூலைப் படித்தல் வேண்டும். அந்த நூலைத் தேவ ஆவி அருளியபடியால் அதை வணக்கத்தோடு ஆராய்வதே நியாயம்.

(2) ஜெபத்தியானத்துடன் வேதநூலைப் படித்தல் வேண்டும். தாவீது பக்தன் பிரார்த்தனை செய்தது போலவே நாமும்: "உமது வேதத்திலுள்ள அதிசயங்களைப் பார்க்கும்படிக்கு என் கண்களைத் திறந்தருளும்" (சங். 119 : 18) எனப் பிரார்த்தனை செய்து படிப்போமாக. இவ்வண்ணம் ஜெப சிந்தையோடே படிப்போமே

மாயில் கடவுள் நமது மனக்கண்களைப் பிரகாசிப்பித்துச் சத்திய வேதத்தை அறிந்து கொள்ள ஒத்தாசை செய்வார்.

(3) **பரிசுத்த ஆவியாகிய கடவுளின்பேரில் சார்ந்தே வேத நூலைப் படித்தல்வேண்டும்.** தேவ ஆவியே சத்திய வேதத்தின் ஆக்கியோனும் விசுவாசிகளின் பரம குருவுமாயிருக்கிறரே. அவர் ஒருவரே நமக்குள் வாசஞ் செய்து கிறிஸ்துவினுடைய சத்தியங்கள் முதலானவைகளைப் போதித்து நம்மைச் சத்திய வழியில் நடத்தக்கூடியவர் (யோவான் 16 : 13—15).

(4) **கவனத்தோடும் சிரத்தையோடும் வேத நூலைப் படித்தல் வேண்டும்.** நாம் கவனமின்றி விரைவாகப் படித்தால் ஒரு பயனுமுண்டாகாது. ஆண்டவர் தமது சத்திய மொழிகளின்மூலம் நமக்கு என்னென்ன கற்பிக்கிறுர் என்கிற கேள்வியைக் கேட்டுக்கொண்டே படிக்கக்கடவோம். மீண்டும், நாம் சத்திய வேதத்தைப் படிக்கும்போது நமது மனதில் படுகிற முக்கியமான வாக்கியங்களைக் குறிப்பிட்டு அவற்றை மனனஞ் செய்வது மிகப் பிரயோஜனமான அப்பியாசம். அதன்மூலம் அநேக வேத வசனங்களை ஒரு வைப்பாக நமது நெஞ்சத்தில் வைத்துவைக்கக் கூடும்.

(5) **ஒழுங்காக வேத நூலைப் படித்தல் வேண்டும்.** "பெரோயா பட்டணத்தார் தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து" பார்த்ததாக அப். 17 : 11 இல் எழுதியிருக்கிறது. சத்திய வேதத்தைப் படியாமல் ஒரு நாளையும் கழிக்காதிருப்போமாக. படிக்கத் தகுந்த நேரம் அதிகாலையே. அந்நேரமே நமது மனம் சுறுசுறுப்பாகவும் ஞாபகசக்தி கூர்மையாகவும் இருக்கிறது.

(6) **கிரமமாக வேத நூல படித்தல் வேண்டும்.** ஒரு ஏற்ற முறையை வைத்துக்கொண்டு முழு வேதத்தையும் கிரமமாகப் படிப்பதே நலம். காலை தோறும் பழைய ஏற்பாட்டில் மூன்று அதிகாரங்களையும் மாலைதோறும் புதிய ஏற்பாட்டில் இரண்டு அதிகாரங்களையும் படித்தால் ஒரு வருடத்திற்குள் பழைய ஏற்பாட்டை ஒரு முறையும் புதிய ஏற்பாட்டை இரு முறையும் படித்து முடிக்கலாம். இவ்வாறு சத்திய வேதத்தை நன்கு அறிந்து கொள்ளலாம்.

(7) **கீழ்ப்படிதலோடு வேதநூலைப் படித்தல் வேண்டும்.** 'என்னை ஆண்டவரே, ஆண்டவரே என்று நீங்கள் சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?" என்று ஆண்டவர் உரைத்ததை நன்ருய்க் கவனிக்கவும் (லூக். 6 : 46). வேதத்தின் சத்திய மொழிகள் நமது ஜீவியத்தில் பயன்படவேண்டுமாயின் அவைகள் காட்டும் ஒளியில் நாம் நடக்க

ரம் அவைகள் பிறப்பிக்கும் விதி விலக்குகளைக் கைக்கொள்ளவும் அவசியமே. இவ்விஷயமாய் வேதம்: "உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" என நம்மை எச்சரிக்கின்றது (யாக். 1: 22). யோவான் 15 : 14 ஐயும் 13 : 17 ஐயும் காண்க.

சத்திய வேதமானது விசுவாசியைப் பாதுகாக்கும் பட்டயத்திற்கும் (எபே. 6 : 17), பிரகாசிப்பிக்கும் ஒளிக்கும் (சங். 119:105, 130), உள்ளதை உள்ளபடி காட்டும் கண்ணாடிக்கும் (யாக். 1 : 23–25), வளரச் செய்யும் பாலுக்கும் (1 பேதுரு 2 : 3), பலமான ஆகாரத்திற்கும் (எபி. 5 : 12-14), புடமிடும் அக்கினிக்கும், உடைக்கும் சம்மட்டிக்கும் (எரே. 23 : 29), இனிக்கும் தேனுக்கும் (சங். 19 : 10), ஐசுவரியவானுக்கும் தங்கத்திற்கும் (சங். 119 : 72) ஒப்பிடப்பட்டிருக்கிறது. இத்தனை அருமையான அருட் பொக்கிஷ நூலைத் தந்த கடவுளுக்கு நன்றி செலுத்தி அதை ஆசையாவலோடு ஆராய்ந்து அவர் சித்தத்தை அறிந்து அதன்படி ஜீவிப்போமாக. சங். 19 : 7-14; 1 : 1-3; 119 : 11, 97, 98, 160 ; 1 தெச. 2 : 13; 2 தீமோ. 2 : 15 ஐக் கவனமாய்ப் படிக்க.

இரண்டாவது, கடவுளது சமுகத்தில் தரித்திருந்து அவரை ஸ்தோத்திரிக்கவும் அவரிடம் மன்றாடவும் வேண்டும் என்கிற வாஞ்சை நமது உள்ளத்தில் உண்டாகவேண்டும்.

தேவனுடைய பிள்ளைகள் தங்கள் பரம தகப்பனைத் துதித்து, அவர் தந்தருளிய சகல இகபர நன்மைகளுக்காகவும் நன்றி செலுத்துவது நலம். உதாரணமாக, தேவபிதா உலகத்திற்கு அனுப்பிய திருச்சுதனாகிய இயேசு கிறிஸ்துவுக்காகவும் பரிசுத்த ஆவிக்காகவும் அவர் அருளிய திருவேதத்திற்காகவும் ஆத்தும இரட்சிப்புக்காகவும் சரீரத்துக்குரிய சுகம் பெலம் ஆகாராதிகள் முதலியவைகளுக்காகவும் அவருக்கு அத்தியந்த துதி தோத்திரம் செலுத்துவது நமது கடமையும் சிலாக்கியமுமாம் (எபே. 1 : 1-12; யாக் 1 : 17 ; கொலோ. 1 : 12, 13 ஐக் காண்க). மக்கள் கடவுளைப் போற்றுவதே அவருக்கு மகிமை செலுத்துவதாகும் (சங். 50 : 23). அதுவே அவருக்குப் பிரீதி (சங். 103).

ஜெபத்தின் மூலம் விசுவாசிகள் தங்கள் தேவைகளைத் தங்கள் பரம தகப்பனிடம் தெரிவிக்கிறார்கள். அவர் தமது திருவுளச் சித்தப்படி அவற்றைத் தங்களுக்கு ஈந்தருளுமாறு பிரார்த்திக்கின்றனர். இப்படி நமது விசாரங்கள், சிக்கல்கள், சங்கடங்கள், சோதனைகள், குறைகள் ஆகிய எல்லாவற்றையும் நாம் தம்மிடம்

அறிவிக்க விரும்புகின்றார். "ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்" (சங். 50 : 15) என்று அவர் வாக்களித்தாரே. மேலும், விசுவாசிகள் மற்றோருக்காகவும் விண்ணப்பஞ் செய்வது ஆண்டவருக்குப் பிரீதி. யார் யாருக்காக வென்றால் தேசத்தின் அதிகாரிகள், நமது உற்றார் சுற்றார், இன்னும் குணப்படாத நமது இனஜன பந்துக்கள், தேவ தொண்டர் முதலியவர்களுக்காகப் பிரார்த்திக்கக் கட்டளையிட்டிருக்கிறார் (1 தீமோ. 2 : 1-4 ; 1 பேதுரு 5 : 7; மத். 6 : 5-15 ; எபே. 6 : 18-20 ; பிலி. 4 : 6-8 ஐக் காண்க).

நாம் அதிகமதிகமாய் ஜெபஞ் செய்து பழகுவோமேயாகில் ஏசாயா 40 : 31 இல் கூறிய வண்ணமாக நாம் புதுபெலனடைந்து கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவோம்; ஓடினாலும் இளைப்படையோம்; நடந்தாலும் சோர்ந்துபோக மாட்டோம்.

என் ஜெப வேளை வாஞ்சிப்பேன் !
அப்போதென் துக்கம் மறப்பேன்.
பிதாவின் பாதம் பணிவேன்,
என் ஆசை யாவும் சொல்லுவேன்.

மூன்றாவது, கிறிஸ்துவுக்கெனச் சாட்சி பகர்ந்து பலரை அவரிடம் அழைத்துக்கொண்டு வரவேண்டும் என்கிற வாஞ்சை நமது உள்ளத்தில் உண்டாகவேண்டும்.

ஒவ்வொரு விசுவாசியும் தன் தன் போதனையினாலும் சாதனையினாலும் கிறிஸ்துவுக்கென்று நற்சாட்சி பகருகிறவனாகவே இருத்தல்வேண்டும். ஒருவன் மற்றோர் இரட்சிக்கப்படவேண்டுமென ஆவல் கொள்ளாவிடில் அவனே ஈடேற்றமடையவில்லை என்கிற எண்ணத்திற்கு இடமுண்டு. ஒரு ஆள் இரட்சிக்கப்பட அவனை இயேசு கிறிஸ்துவினிடம் அழைத்து வருவதின் சந்தோஷம் ஒப்பற்றதே. ஆகையால் பவுல் அப்போஸ்தலன் "எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" என்றார் (1 கொரி. 9 : 22).

மீண்டும், இயேசு நாதர் தம் சீஷரிடம் ஒப்புவித்த கடைசி கட்டளையாவது : "நீங்கள் உலகமெங்கும் போய்ச் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்பதே (மாற்கு 16 : 15), அதுவுமன்றி : "நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றார் (அப். 1 : 8).

கண்கண்ட சாட்சியே உண்மையான சாட்சி. ஆனபடியால் கிறிஸ்துவின் அன்பை ருசித்தவனே அவருக்கேற்ற உத்தமச் சாட்சியாவான். நாமும் நாம் அறிந்து, நேசித்து, நம்பிச் சேவிக்கிற ஆண்டவரைக் குறித்து நமது இன ஜனத்தார், சிநேகிதர் முதலியோருக்கு நற்சாட்சி பகர்ந்து அவர்களைக் கிறிஸ்துவினண்டை கொணடுவரப் பிரயத்தனிப்போமாக.

அச்சம், கூச்சம், கோழைத்தனம் ஆகிய இவை நம்மெல்லாரையும் பிடிக்கக்கூடும். எனினும் நாம் அவற்றை மேற்கொள்ளல் வேண்டும். "மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்" என வேதம் நம்மை எச்சரிக்கிறது (நீதி. 29 : 25). உலகத்தார் நம்மை வைது, பகிடிசெய்து நிந்தித்தாலும் நாம் நமது இரட்சகருக்குச் சாட்சி கூறுதபடி இப்படிப்பட்டவை நம்மைத் தடுக்கலாகாது. அவர் நமதினிமித்தம் அவமானத்தை எண்ணுமல் சிலுவையைச் சகித்தாரே (எபி. 12 : 2). நாம் கிறிஸ்துவுக்கென ஆத்தும ஆதாயஞ் செய்யாதபடி பிசாசும் நம்மைத் தடுத்துப் பார்ப்பான். ஆனால் வேத ஆராய்ச்சியும் பிரார்த்தனையும் இவ்விஷயத்தில் நம்மைத் திடப்படுத்தி உற்சாகப்படுத்தும். அந்திரேயா என்பவன் நமக்கு நல்ல முன்மாதிரியல்லவா? அவன் கிறிஸ்துவை அறிந்தவுடன் "தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு............அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக்கொண்டு வந்தான்" (யோவான் 1 : 40-42). இவ்வகை திடகார்த்தமான சாட்சியின் மூலம் எத்தனையோ முழு குடும்பங்களும் இயேசுவை நம்பிச் சார்ந்திருக்கிறதைக் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம்! நண்பரே, நீர் அந்திரேயாவைப் போல் செய்ய மனமுண்டா?

கிறிஸ்துவுக்கென ஆத்துமாக்களைப் பலவிதமாக ஆதாயப்படுத்தலாம். ஆனால் "ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்" என (நீதி. *11 : 30*) சத்திய வேதம் கூறுகிறபடியால் அவ்வாறு செய்வதற்குப் பரம ஞானம் தேவை என்று அறிந்து கொள்ளுகிறோம். ஞானம் மட்டுமல்லாமல் விவேகமும் தேவ நடத்துதலும் இந்தத் திருத்தொண்டாற்றுவோருக்கு அவசியமானவை. கடவுள் தம்மிடம் கேட்கிறவர்களுக்கு இவைகளை ஈந்தருளுவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார் (யாக். 1 : 5), ஆண்டவருக்கென்று சாட்சி பகருவதற்குச் சுவிசேஷ ஒற்றைத் தாள்களை ஞானத்தோடும் ஜெபசிந்தையோடும் நாம் சந்திப்போரிடம் கொடுப்பது மிகவும் உதவியானதே. ஏனெனில் ஒருவருக்கு ஏற்ற மரியாதையுடன் ஒரு பிரதியைக் கொடுத்தால் அது அவரிடம் சற்று சம்பாஷணை செய்வதற்கு இடமுண்

டாக்கக் கூடும். 'கற்கக் கற்கக் கசடறும்' என்கிற பழமொழிக்கேற்ப ஆண்டவரினிமித்தம் சாட்சி கூறக் கூறத் தேர்ச்சி அடைந்து அந்த அருமையான ஊழியத்திற்குரிய ஆனந்தத்தை அனுபவிப்போம். கிறிஸ்துநாதர் நமதினிமித்தம் தம்மைத் தந்தாராகையால் அவர் பாராட்டிய அந்த ஒப்பற்ற அன்பைப் பிரதிவிம்பிக்குமாறு அவரிடம் மனிதரைக் கொண்டுவர நம்மை ஒப்புவிக்க வேண்டுமே (ரோமர் *10: 1, 17; 1: 14--16;* எசே. *33: 1—6;* நீதி. *24: 11, 12;* மத். *28: 18—20;* தானி. *12: 3*).

நான்காவது, சகலவிதப் பாவத்துக்கும் விலகி ஜீவித்தல் வேண்டும் என்கிற வாஞ்சை நமது உள்ளத்தில் உண்டாகவேண்டும்.

பாவத்துக்கு இடமான புஸ்தகங்கள், விளையாட்டுகள், உல்லாசங்கள் முதலியவைகளுக்கு நாம் விலகியிருப்பது உத்தமம் (*1* தெச. *5 : 22*). விசுவாசிகள் உள்ளும் புறம்பும் சுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டுமெனக் கடவுள் விரும்புகின்றார். ஏனெனில், ஒருவனது ஜீவியத்திலாவது உள்ளத்திலாவது எவ்வகையான அசுத்தம் காணப்பட்டாலும் அது அவனைத் தீட்டுப்படுத்தி அவன் ஆண்டவருக்கெனச் செய்யும் பணிவிடையைப் பங்கப்படுத்தும். அதுவுமன்றி, பேணி வைக்கப்பட்ட பாவம் அவனது ஆத்துமச் சந்தோஷத்தைப் போக்கி அவனது புத்தியையும் கெடுத்துவிடும் (*1* தீமோ. *4 : 8, 9, 16; 2* தீமோ. *2: 19—22*). கர்த்தருக்கென்று வல்லமையான திருத்தொண்டு புரிந்திருக்கக்கூடிய அநேகக் கிறிஸ்தவர்களின் ஜீவியம் இப்படியே பலனற்றுப்போயிருக்கிறது (*1* கொரி. *9: 24, 27; 11: 3, 31*).

நாம் நமது மனோ வாக்கு காயம் இவைகளில் ஏதோ ஒரு குற்றஞ் செய்ததாக உணர்ந்தமாத்திரத்தில் நமது பரமபிதாவிடம் அதை அறிக்கையிட்டு அப்பாவத்தை வெறுத்துத் தள்ளுதல் வேண்டும். மனிதரில் ஒருவருக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்தால் அக்குற்றத்தை அவருக்கு அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்டு கூடியவரையில் காரியத்தைச் சரிப்படுத்த முயலுவது அவசியம் (மத். *18: 15—22*).

மேற்கூறிய வண்ணம் நம்மை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துவது பழைய ஜென்ம சுபாவத்திற்கு எவ்வளவு வருத்தமாயினும் நாம் எப்பொழுதுமே அவ்வாறு செய்துகொண்டு ஓயாத விழிப்பாயிருக்க வேண்டியது. இவ்விஷயமாய் ஆண்டவர் "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்"

ன்று நம்மை ஏவுகின்றார் (மத். 26: 41). ஆகையால் நாம் ஏதோ ஒரு பாவத்தில் ஈடுபட்டால் உடனே அதைக் கடவுக்கு அறிக்கையிட்டு அவரோடு ஒப்புரவாகுவோமாக (1 யோவான் 1: 9). சுய பெலனையாவது நீதியையாவது நம்பிச் சாருதல் எந்த விசுவாசியும் தவிர்க்கவேண்டிய கேடாகும் (கலா. 6 : 3; ரோ. 12: 3 ; 1 கொரி. 8 : 2; யோவான் 15 : 5).

கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பிரசனைகளைத் தீர்க்கக் கீழ்க்காணும் ஐந்து கேள்விகளைக் கேட்பது நலம்.

(1) சத்திய வேத வசனங்களுக்கு ஒத்துவருகிறதா? ஏதோ ஒரு வேத வாக்கியம் நாம் எத்தனித்த காரியத்திற்கு விரோதமாயிருந்தால் நாம் கொண்ட எண்ணத்தை உடனே விட்டுவிடவேண்டும்.

(2) சத்திய வேதத்தின் பொது உபதேசத்திற்கு ஒத்து வருகிறதா? நாம் செய்யப்போகும் செய்கை சத்திய வேதநூல் வற்புறுத்திப் போதிக்கும் சுத்தம், நல்லொழுக்கம், நீதி, உண்மை முதலியவைகளுக்கு மாறாக இருக்குமாயின் அதைச் செய்யாமல் இருப்பதே நம் கடமையாகும்.

(3) கடவுளுக்கு மகிமையுண்டாக நான் இதில் ஈடுபடக் கூடுமா? "ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக் கென்று செய்யுங்கள்" என்னும் வாக்கியத்தை நன்கு கவனிக்க (1 கொரி. 10 : 31).

(4) கடவுள் இவ்விஷயத்தை ஆசீர்வதிப்பார் என எதிர் பார்க்க இடமுண்டா? இல்லையேல் இதைத் தொடாமல் இருப்பதே உசிதம்.

(5) நான் இதைச் செய்யும் போதே ஆண்டவர் உலகிற்கு வருவாரானால் சந்தோஷிப்பேனா, வெட்கப்படுவேனா? (மத். 24 : 42-46).

இதற்கு அனுசரணையான ஓர் உதாரணம் கூறுவோம். ஒருவன் தான் முந்தினநாள் அணிந்த சட்டையைப் போட்டுக் கொள்ளலாமா, அது அழுக்காயிற்றா என்று தன் மனைவியைக் கேட்டானாம். அப்பெண் "உங்களுக்குச் சந்தேகமிருந்தால் அச் சட்டை அழுக்குத்தான் என்பது தெளிவு" என்று கூறி அவனது சந்தேகத்தைத் தீர்த்தாளாம். இவ்வாறே சந்தேகத்திற்கு இடமான எவ்வகையான நடத்தையும் அசுசி எனத் தீர்த்து விலகுவோமாக. இதுவே மெய்ஞ்ஞானம்.

ஐந்தாவது, மற்ற விசுவாசிகளுடன் சகவாசஞ் செய்யவேண்டு என்கிற வாஞ்சை நமது உள்ளத்தில் உண்டாகவேண்டும்.

அப்படியே தாவீது பக்தன்: "உமக்குப் பயந்து உமது கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற அனைவருக்கும் நான் தோழன்" என்றுரைத்தனர் (சங். 119 : 63). இனத்தோடு இனம் வெள்ளாடு தன்னோடே என்கிற முதுமொழி உண்மையே. கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடிப் பிரார்த்தனை செய்யவும் தம்மைத் தொழுது கொள்ளவும், வேத ஆராய்ச்சி செய்யவும் சுவிசேஷப் பிரபல்யம் செய்யவும் வேண்டுமென்று கடவுள் விரும்புகின்றார். எந்த விசுவாசியாகிலும் புதிய ஏற்பாட்டில் விளம்பிய முறைகளுக்கேற்ற ஒரு சபையில் சேரப் பிரயத்தனிக்கவேண்டும். இப்படித் திருச்சபையில் அங்கத்தானாவதினால் கிறிஸ்தவ அன்பு, ஐக்கியம், ஆதரவு, உறவாட்டம் முதலிய பாக்கிய சிலாக்கியங்களை அனுபவிப்பான்.

ஆதித் திருச்சபையார் கிறிஸ்துவின் நாமத்தில் ஒன்றாய்க்கூடி ஒருவரையொருவர் தேற்றித் திடப்படுத்தி ஒருவருக்காக ஒருவர் ஜெபித்து வந்தார்களே (அப். 2 : 41-47). ஒரு சமயத்தில் அவர்களில் சிலர் காவலில் போடப்பட்டு விடுதலையானதும் "தங்களைச் சேர்ந்தவர்களிடத்தில்" திரும்பினதாகப் படிக்கிறோம் (அப். 4:23). நாமும் அவ்வாறு நம்மைச் சேர்ந்தவர்களாகிய விசுவாசக் கூட்டத்தாரிடம் அடிக்கடி செல்லுவோமாக. "சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்" (எபி. 10 : 25).

அன்பரே, உண்மையுள்ள விசுவாசிகள் மாத்திரம் உமது நெருங்கிய சிநேகிதராயிருப்பது சரி. ஏனெனில் சத்திய தேவம் "அன்னிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக..............அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?" என்றும் (2 கொரி. 6:14-18); "உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை" என்றும் (யாக். 4 : 4) நம்மை எச்சரிக்கின்றது. மறு பட்சத்திலோ, மல்கியா 3 : 16 இல், கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டதாக எழுதியிருக்கிறது கவனிக்கத்தக்கதே. ஆகையால், உத்தமமும் தேவதாபக்தியும் வேதத்தின் பேரில் வாஞ்சையுமுடைய சபையாரிடம் சேரத் தீவிரிப்பீராக. அப்பேர்ப்பட்ட விசுவாசிகள் உமக்கு மெத்தவும் ஒத்தாசையாயிருப்பார்கள் என்பதற்கு ஐயமில்லை. ஆகவே, அடாத சகவாசத்திற்கு விலகியிருந்து உத்தம விசுவாசிகளோடே ஐக்கியப்பட்டிருப்போமாக.

ஆருவது, ஞான தீட்சை, திருவிருந்து ஆகிய இவ்விரு நியமங்கள் விஷயமாய் ஆண்டவரின் கட்டளைப்படி நடக்கவேண்டும் என்கிற வாஞ்சை நமது உள்ளத்தில் உண்டாகவேண்டும்.

ஆதி திருச்சபையின் காலத்தில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்த யாவரும் தாங்கள் அவரை ஏற்றுக்கொண்டவுடனே அவர் நாமத்தினுலே ஞானஸ்நானம் பெற்றனர் என்பது அப்போஸ்தலர் நடபடிகளின் ஆகமத்தால் வெகு தெளிவாகிறது (அப். *2 : 41; 8 : 29-38; 9:18; 10:43-48; 16:14, 15, 30-34; 18.8*). கிறிஸ்துவை விசுவாசித்து நடக்கிறவர்கள் மட்டும் ஞானஸ்நானம் பெறுவது சரி. அந்த நியமத்தின் உட்கருத்தாவது; இயேசுநாதர் நமது பாவங்களினிமித்தம் எப்படித் தேவ கோபாக்கினையின் அலைகளில் முழுகி மரணமடைந்து திரும்ப உயிர்த்தாரோ அப்படியே விசுவாசியும் ஆண்டவரின் கட்டளைப்படி அவரது மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் ஒப்பாகத் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுகிருன். அந்நாள் முதற்கொண்டு அவன் புது ஆளாக அருள் நாதருக்கென ஜீவிக்க முயலுகிருன் (மத். *28 : 19, 20*; மாற்கு *16 : 16*). ஞான தீட்சையின் ஞானர்த்தம் ரோமர் *6 : 4, 5* இலும் கொலோ. *2 : 12* இலும் தெளிவுறப் போதித்திருக்கிறது.

இரட்சகர் தாம் மரணமடையப்போகும் முந்தின நாள் இரவு திருவிருந்தை ஏற்படுத்தினர் (லூக். 22 : 19, *20*; மத். *26 : 26-28*; மாற்கு 14 : 22-25). தாம் உயிர்த்தெழுந்தபின் பவுல் அப்போஸ்தலனிடம் அந்தத் திவ்விய நியமத்தைக்குறித்து வெளிப்படுத்திய விபரம் 1 கொரி. 11 : 23, 24 இல் காணப்படும். ஆண்டவர் கூறியதை நன்கு கவனிக்க. "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்ருரே. இவ்வண்ணமாகத் திருவிருந்தின் மூலம் அருள்நாதரை நினைத்துக்கொள்ளும்படி நீர் புதிய ஏற்பாட்டின் ஒழுங்குகளுக்கேற்ப ஸ்தாபிக்கப்பட்ட ஒரு சபையில் சேருவது நலம்.

ஏழாவது, நம்மாலானமட்டும் கடவுளுக்கு மகிமையுண்டாக ஜீவிக்கவேண்டும் என்கிற வாஞ்சை நமது உள்ளத்தில் உண்டாகவேண்டும்.

நாம் "அவருடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக" விளங்க வேண்டுமாய் ஆண்டவர் நம்மை இரட்சித்தார் (எபே. 1 : 5, 11, *14*). மீண்டும், "நீங்கள் உங்களுடையவர்களல்லவென்று அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள்

சரீரத்திலும் உங்கள் ஆவியிலும் தேவனை மகிமைப் படுத்துங்கள்" என நம்மை ஏவியுமிருக்கின்றார் (1 கொரி. 6 : 19, 20). கடவுளது சித்தம் தங்கள் ஜீவியத்தில் பூரணமாய் நிறைவேறவேண்டுமாய் விசுவாசிகள் யாவரும் பேராவல் கொள்வதவசியம். "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் உங்களிடத்திலும், நீங்கள் அவரிடத்திலும் மகிமைப் படும் பொருட்டாக நம்முடைய தேவன் உங்களைத் தம்முடைய அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயவுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறோம்" எனப் பவுல் தமது சபையாரிடம் எழுதினார் (2 தெச. 1 : 11, 12).

அப்படிக்கில்லாமல், விசுவாசிகள் தங்கள் சுய இஷ்டப்படியும், தற்புகழ்ச்சிக்காகவும், நடக்கும்படியான ஆபத்துண்டு என்பதை நாம் ஒருகாலும் மறத்தலாகாது. நாம் இவ்வாறு நடவாதபடி பல வேத வசனங்களால் எச்சரிப்படைகிறோம் (ரோமர் 15 : 1-3; 2 கொரி. 5 : 14—16). "நாம் எல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே" என்றும் அந்நாளில் புகழ்ச்சியாவது இகழ்ச்சியாவது அடைவோம் என்றும் உணர்ந்து ஆண்டவர் வரும் நாளில் அவர் நம்மைப் பார்த்து: "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே.......... உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று உரைக்கத்தக்கதாக உத்தமமான ஜீவியஞ் செய்து வருவோமாக (1 கொரி. 3 : 11-15; ரோமர் 14 : 7-10; மத். 25 : 21; 2 தீமோ. 4 : 6-8 ஐக் கவனத்துடன் படிக்க).

கடவுளுக்குப் புகழ்ச்சியாக இவ்வகையான ஜீவியஞ்செய்வதெப்படியெனில்,

(1) ஒருவன் தன் சரீரம் முழுவதையும் ஆண்டவருக்கெனத் தத்தஞ்செய்தல் வேண்டும் (ரோமர் 6 : 12, 13). இவ்வாறு செய்தால் மட்டும் தேவனுக்குப் பிரீதியான பரிசுத்த ஜீவியஞ் செய்யக்கூடும். அதாவது, உலகத்தார்முன் உண்மையும் நேர்மையும் ஒழுக்கமுமான ஜீவியம் செய்தலேயாம். தமது பக்தர்கள் பாவமும் அந்தகாரமும் நிறைந்த உலகத்தில் நீதியுள்ளவர்களாகப் பிரகாசிக்கவேண்டும் என்று கடவுள் விரும்புகின்றார் (மத. 5 : 16; பிலி. 2 : 14-16 ; 1 தெச. 2 : 10).

இப்பேர்கொத்த பரிசுத்த ஜீவியத்திற்கு இன்றியமையாதவை சுயவெறுப்பும் சுயதியாகமுமே. இருப்பினும் இவ்வகையான நடத்தையே நமக்கும் மற்றோருக்கும் ஆசீர்வாதகரமானது.

(2) ஒருவன் தன்னைக் கடவுளுக்கென ஜீவபலியாக ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு செய்தால் மட்டும் மனிதருக்குப் பிரயோஜனமான ஜீவியஞ் செய்யக்கூடும். இதைப்படிக்கும் பிரியமானவரே, நீர் ரோமர் 12: 1, 2ஐ முழுந்தாளிட்டே படித்து உம்மை ஆண்டவருக்கு ஒப்புக்கொடும். அவர் உம்மை அனுப்பும் இடத்திற்குச் செல்லவும் அவர் சித்தங்கொள்ளும் வார்த்தைகளைப் பேசவும் அவர் விருப்பத்திற்கேற்ற ஆளாகவும் உம்மை அவருக்குத் தத்தஞ் செய்வீராக. இவ்வண்ணம் செய்வீரேயாகில் நீர் "தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று" பகுத்தறிவீர் என்று வாக்களித்திருக்கிறுர்.

(3) ஒருவன் தன் வரவில் ஒரு பங்கை ஆண்டவருக்கென்று உதாரத்துவமாய் ஈதல் வேண்டும். "நீங்கள் உங்களுடையவர்களல்ல" என்கிற வேதசொல் விசுவாசிகளின் சரீரத்தையும் அதற்குரிய சத்துவ தத்துவங்களையும் மட்டுமல்ல அவர்களுடைய உடைமைகளனைத்தையும் குறிக்கிறது. சத்திய வேதத்தில் விசுவாசிகள் கடவுள் தங்களிடத்தில் கொடுத்த சகல சொத்துக்கும் உத்தரவாதிகளாகப் பாவிக்கப்படுகின்றனர். கடைசி நாளில் அவர்கள் இந்த உக்கிராணத்திற்குக் கணக்கு ஒப்புக்கொடுக்க நேரிடும். தாவீது பக்தன் இதைத் தம் மனதில் வைத்துக்கொண்டு ஆண்டவரின் திருச்சேவையினிமித்தம் பொருளைத் தாராளமாய்க் கொடுத்த காலத்தில்: "இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனம் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது, உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்" என்று கடவுளுக்கே மகிமையைச் செலுத்தினுர் (1 நாளா. 29: 14).

எல்லா கிறிஸ்தவர்களும் தங்கள் வரவில் ஒரு திட்டமான பாகத்தைக் கர்த்தருக்கென்றும் அவரது திருத்தொண்டிற்கென்றும் பிரத்தியேகப்படுத்தக்கடவர்கள். இவ்வாறு செய்வதினுல் மட்டும் நாம் ஒழுங்காகவும் ஏற்ற அளவாகவும் சுவிசேஷ பிரபல்லியத்திற்கெனக் கொடுக்கக் கூடியவர்களாவோம் (1 கொரி. 16: 2ஐக் காண்க). 2 கொரிந்தியர் 8ம் 9ம் அதிகாரங்கள் முழுவதிலும் இதற்குரிய போதனை புகட்டப்பட்டிருக்கிறது. இவ்வத்தியாயங்களைக் கவனத்துடன் படிக்க. ஈகை என்கிற கிறிஸ்தவ இலட்சணம் நமது சிஷத்துவத்தைப் பரிசோதித்துப் பார்க்கக்கூடிய உரைகல் எனச் சொல்லலாம். பிதாவாகிய கடவுள் தமது ஒரே சுதனுகிய கிறிஸ்துவை நமக்காகத் தந்தே தமது அன்பை ருசுப்படுத்தினுர். அப்படியே கிறிஸ்துவும் நமதினிமித்தம் தம்மைத் தந்தே தமது பேரன்பை விளங்கப் பண்ணினுர். அவ்வாறு நாமும் அவருக்கென உதாரத்துவமாய் நமது பொருளை ஈந்தால்தான் அவர் மேல் நாம்

வைத்த அன்பை ரூபகாரப்படுத்தக்கூடும் (ரோமர் 8: 32; 2 கொரி 8 : 9; 9 : 7).

கடவுளின் பழைய நியாயப்பிரமாணத்தின்படி இஸ்ரவேலர் அவரது திருச்சேவைக்காகத் தங்கள் சொத்திலும் வரவிலும் பத்தில் ஒன்றைச் செலுத்தக் கடமைப்பட்டிருந்தனர். தற்காலக் கிறிஸ்தவர்களாகிய நாம் கடமைக்கென்று அவ்வாறு செய்ய வேண்டுவதில்லை. எனினும் ஆண்டவர் நம்மிடத்தில் தந்த இகபர பாக்கிய சிலாக்கியங்களுக்காக நன்றியறிதலோடும் அன்போடும் ஏவப்பட்டு அவரது சபைக்காகவும் சேவைக்காகவும் நம் வரவில் ஒரு திட்டமான பாகத்தைப் பிரித்து வைக்கவேண்டுமே. அந்தப் பணம் திருச்சபை கூடும் ஆலயத்தைப் பாதுகாக்கவும் தேவ ஊழியரை ஆதரிக்கவும் ஏழை விசுவாசிகளைப் போஷிக்கவும் தேவையாயிருக்கிறது.

இப்போதனைக்கு முடிவாக, கிறிஸ்தவ சபைக்குரிய 5 நிபந்தனைகளைச் சுருக்கிக் கூறுவோம் :—

(a) **நியாயமான முறையில் பணம் சம்பாதித்தே கடவுளுக்கென்று கொடுத்தல் வேண்டும்** (அப். 20 : 33—35). சில இடங்களில் ஏழை விசுவாசி பாடுபட்டு உழைத்துக் கர்த்தரது திருப்பணிக்காகப் பணம் சம்பாதிக்கின்றனர். தமது பிள்ளைகள் உழைப்பாளிகளும், நிஜஸ்தருமாயிருக்க விரும்புகின்றார் (ரோ. 12 : 17). மறுபட்சத்தில் எந்தக் கிறிஸ்தவனும் கொடிய வியாதிகளுக்குப் பயப்படுமாப்போல் கடன் படுதலுக்குப் பயந்து விலகியிருக்கக்கடவன். கடன் பட்டு வாங்குவதைக் காட்டிலும் நமக்குத் தேவையானதை வாங்காமலே இருப்பது உசிதம் (ரோ. 13: 8).

(b) **நமது சொந்தச் செலவுக்காக நாம் பணத்தை உபயோகிக்கிற விஷயத்தில் அதிக ஜாக்கிரதையாய் இருத்தல் வேண்டும்.** மிதமிஞ்சிச் சிக்கனமாய் ஜீவிக்க வேண்டுமென்றல்ல, நியாயமானபடி நமது சொந்தச் செலவை மட்டுப் படுத்துவது உசிதம் என்போம். ஊதாரிகளைப்போல நமது சம்பாத்தியம் முழுவதையும் உணவிலும் உடுப்பிலும் செலவுசெய்வது ஆகாத காரியம். நமது வரவு செலவு விஷயத்தைக் கணக்கிட்டு, நமது குடும்பத்தின் போஷிப்பு முதலியவைகளுக்குத் தேவையானதைப் பிரத்தியேகப்படுத்துவதோடு எப்படியாவது ஆண்டவரின் ஏழை மக்களுக்கு உதவி புரியத்தக்கதாக கொஞ்சமாவது மீத்து வைப்பது நலம். விசுவாசிகள் எப்படியாவது தங்கள் ஆசைகளை மட்டுப் படுத்தித் தங்களுக்கு அவசியமில்லாத செலவு செய்யாதபடி எச்சரிக்கையாயிருக்கக்கடவர்கள்.

(c) **நமது சபை ஆண்டவருக்கும் அவருடையவர்களுக்கும் மிகவும் பிரயோஜனமாயிருக்கத் தக்கதாக நாம் அதிக ஞானமாய்க் கொடுப்பது அவசியம்.** பலர் தாங்கள் கடவுளுக்கெனப் பிர

..ஷடை செய்த பணத்தை அவரின் திருநாமத்திற்கு அபகீர்த்
..ுண்டாகப் பிரயோகிப்பதை அறிந்திருக்கிறோம். நாம் கர்த்தரின்
ஒரு பணத்தை ஏதோ ஒரு காரியமாய் உபயோகிக்கு முன்னர், இ..
.. தேவமகிமைக்கும் சுவிசேஷ பிரபல்லியத்திற்கும் ஏற்றவாறு
..கையாடப்படுமா என்று நன்றாய்ச் சிந்தித்தே கொடுப்போமாக.
..ே அநேகர் அஜாக்கிரதையினாலே, வேத சத்தியங்களுக்கு விரோத..
..மாய் நடக்கிறவர்களிடம் தங்கள் பணத்தைக் கொடுத்து வருகிறா..
கள். இது மிகவும் விசனிக்கத்தக்கதே. நாம் ஆண்டவரது பொருளை
இவ்வாறு கையாடாதபடி விழிப்பாயிருப்போமாக.

(*d*) **நாம் உற்சாகமாயும் உதாரத்துவமாயும் ஈதல் வேண்டும்.** விசனத்தோடாவது பிசினித்தனமாயாவது கொடுத்த பணம் கடவு..ளுக்கு மகிமையாகவும் கொடுத்தவனுக்கு ஆசீர்வாதமாகவு.. இராது (2 கொரி. 9 : 6-8). நாம் தம்மிடம் கொடுக்கலாம் என்று கடவுள் அருளிச்செய்தது எவ்வளவோ பெரிய சிலாக்கியம்! மனி..ரிடம் கடவுள் கடன் படவேமாட்டார் என்பது உறுதிமொழி. தமக்கெனக் கொடுக்கப்படும் பணத்தைக் கடவுள் நூறத்தனை..யாகத் திருப்பிக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார். இது நூற்..றுக்கு 10,000 வீதாசாரமல்லோ! (மத். 19 : 29), "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்று இயேசுநாத..ர் உரைத்தார். கர்த்தருக்கென்று கொடுக்கும் செய்கையானது கடவுள், ஈந்தவர், பெற்றுக்கொண்டவர் ஆகிய மூவருக்கும் மகிழ்ச்சியை உண்டாக்குகின்றதே. இப்படியிருக்கிறபடியால் நாம் குணப்படும் நாள் முதற்கொண்டு ஒழுங்காகவும் நியாயமான அளவாக..வும் கிறிஸ்தவ ஈகையில் பழகுவோமாக.

(*e*) **ஆண்டவரின் பங்கு விஷயமாய் நாம் தவறாக ஒன்றும் செய்யாதபடி சரியான கணக்கு வைத்தல் அவசியம்.** இந்தக் கணக்கு வைக்கும்படியாக ஒரு புத்தகத்தை வைத்துக்கொள்ள வேண்டும். அப்புத்தகத்தில் வரவு செலவுகளைக் குறிப்பிட வேண்டும். உக்கிராணக்காரர் யாவரும் தங்கள் உக்கிராணத்தை உண்மையாய்க் கையாடி வேண்டும்போது கணக்கு ஒப்புவிக்க எப்பொழுதுமே ஆயத்தமாயிருக்கக் கடமைப்பட்டவர்கள் (1 கொரி. 4 : 2; லூக். 16 : 2).

"விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்களிலும் நீங்கள் பெருகியிருக்கிறதுபோல இந்தத் தர்மகாரியத்திலும் பெருகவேண்டும்" (2 கொரி. 8 : 7).

கடவுள்தாமே இச்சிறிய புத்தகத்தைப் பலருக்குப் பிரயோஜனமுண்டாக ஆசீர்வதிப்பாராக. அவருக்கே மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென் (வெளி. 1 : 6).

The Bapuji Press, 187. Mount Road., Madras-2.—3000/'56

S. B. Mission Kovilpatti, S. R.

விலை : 25 நயே பைசே

[redacted]